குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23] குரோதிஆண்டு சித்திரைத்திங்கள் 10—5—64 [இத



தருமையாதீனக் குரு முதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

உருவை அருவை
  ஒளியை வெளியை
இருளைச் சிவமென்
  றிராதே—மருளைப்
பிறிந்தறிவிற் கண்டதனைப்
  பின்னமற எங்குஞ்
செறிந்தபொருள் தானே
  சிவம். (17)

ஆசிரியர் ;-

வித்துவான்,
சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,
சொ. சிங்காரவேலன், M. A.,

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 | 10–5–64 | இதழ் 6

உட்பொருள்

எண்		பக்கம்
1	மகோற்சவப் பத்திரிகை	i
2	அருட்கடலும் அன்புக்கடலும்	... 318
3	வணக்கம்	... 325
4	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை	... 326
5	சித்தாந்த வினாவிடை	... 335
6	தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள்	... 340
7	அவனன்றி ஓர் அணுவும் அசையாது	... 344
8	சஹஸ்ராகமம்	... 348
9	'யாம் இரப்பவை'	... 352
10	தமிழ் கூறு நல்லுலகம்	... 356
11	ஆச்சாள்புரம் கும்பாபிஷேகம்	... 364
12	செய்திகள்	... 368
13	எதிர்காலம்	... 372
14	மதிப்புரை	360, 363

அட்டைப்பட விளக்கம்

தருமையாதீன ஸ்தாபகர்
ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

குருபூஜைத் திருநாள்
1—6—64.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

மகோற்சவப் பத்திரிகை

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ்குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப் பெற்றதும் காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் சிறப்புத்திருநாமம் உற்றதும், குருபீடஸ்தானமும் ஆகிய தருமபுரத்தின்கண் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற **ஸ்ரீஞானம்பிகா சமேத ஸ்ரீஞானபுரீசுவர சுவாமிக்கு** நிகழும் குரோதி ஆண்டு வைகாசித் திங்கள் 10-வது நாள் (23—5—1964) சனிக்கிழமை தொடங்கி மகோற்சவம் நடைபெறும்.

திருநாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் இன்புறுக.

திருக்கயிலாய பரம்பரைத்
தருமையாதீனம்
கார்பார்,

சொக்கநாதத் தம்பிரான்.

தருமையாதீன மடாலயம்,
குரோதி - வைகாசி

ஆதீன மடாலயத் திருநெறிய தெய்வத்தமிழ்மன்றத்தில் நாள்தோறும் மாலை 6-மணி முதல் மாநாட்டு நிகழ்ச்சிகளும் பூசைமடத்தில் காலை 10மணிமுதல்தோத்திரசாத்திரவகுப்பும் நடைபெறும்.

திருநாள் விபரம்.

தமிழ் ஞூமீ உ	இங்கிலீஷ் ஞூமீ உ	வாரம்	திருநாள்	உற்சவ விபரம்
வைகாசி ஸ்ரீ 9	22—5—64	சுக்கிரவாரம்		சித்திரா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 35-0 நாழிகைக்கு மேல் 40-நாழிகைக்குள் (இரவுமணி 8to10க்குள்) தனுர்லக்னத்தில் அனுக்ஞை விக்னேசுவரபூஜை வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்.
10	23—5—64	ஸ்திரவாரம்	1	சித்திரா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 3-30 நாழிகைக்குமேல் 6-15 நாழிகைக்குள் (காலை மணி 7-30 க்குமேல் 8-30க்குள்) மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வர சுவாமி மஹோத்ஸவ துவஜாரோகனம்,
11	24—5—64	பானுவாரம்	2	கற்பகவிருக்ஷக் காட்சி.
12	25—5—64	சோமவாரம்	3	பூதம், பூதகி, இடும்ப வாகனக் காட்சி.

குரோதி௵

13	26—5—64	மங்களவாரம்	4	நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி.
14	27—5—64	புதவாரம்	5	சகோபுர ரிஷப வாகனக்காட்சி.
15	28—5—64	குருவாரம்	6	யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக்காட்சி
16	29—5—64	சுக்கிரவாரம்	7	திருக்கல்யாண வைபவம், புஷ்பவிமானம் வெள்ளிரதக் காட்சி.
17	30—5—64	ஸ்திரவாரம்	8	குதிரை, கிளி, யானைவாகனக் காட்சி.
18	31—5—64	பானுவாரம்	9	காலை மணி 7-0 க்கு மேல் 8-30க்குள் மிதுன லக்னத்தில் மஹா ரதாரோஹணம், திருத்தேர்.
19	1—6—64	சோமவாரம்	10	காலை ஸ்ரீசபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல் பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தங் கொடுத் தருளல். இரவு துவஜாவரோஹணம்
20	2—6—64	மங்களவாரம்		மௌன உற்சவம்.
21	3—6—64	புதவாரம்		சண்டேசுரர் உற்சவம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்தமாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திரம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவ மாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னாதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத்தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும் இரு கடைக்க ணாளன்
பார்புகழும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

(சம்பந்த சரணாலயர்)

குருபாதம்

ஆதி பரமாசாரிய சுவாமிகள் சரிதம்

பாண்டியநாடு, சீவில்லிபுத்தூர், கார்காத்தார் (சைவ வேளாளர்) மரபு. தந்தையார் சுப்பிரமணியப் பிள்ளை, தாயார் மீனாட்சி அம்மையார், திங்கட்கிழமையில் தோற்றம். பிள்ளைத் திருப்பெயர் 'ஞானசம்பந்தன்', கல்வியில் இளமையிலேயே பூரணர். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்க லிங்கத்தை வழிபட மதுரைத் திருவாலவாய்க்குப் பிள்ளையோடு போந்தனர். திரும்பும் நாளில் அம்மையப்பர் ஆலவாயானும் அங்கையர்க்கண்ணியுமே, உடம்பிற்குத் தாய் தந்தையான உம்மோடு வாரேன் என்று மறுத்து, அவரை உளங்கொளச் சொல்லி விடுத்தார் மெய்யுணர் பிள்ளையார்.

நாள்தோறும் பொற்றாமரை முழுக்கு. வேளைதோறும் திருக்கோயில் வழிபாடு. ஒருநாள் அக்குளக்கரையில் அடியவர் புரியும் சிவபூஜையில் அழுந்திற்று அவர் உள்ளம்.

" தாவரிய அன்பினால் சம்புவினை எவ்விடத்தும்
யாவர்களும் அர்ச்சிக்கும் படிகண்டால் இனிதுவந்து
பாவனையால் நோக்கினால் பலர்காணப் பயன்பெறுவார்
மேவரிய அன்பினால் மேலவர்க்கும் மேலானார்."

(சேக்கிழார் சுவாமிகள்)

இது பொய்யாமொழி, ஞானசம்பந்தர் சொக்கலிங்கத்தை வேண்டினார். இரவில் கனவில் அருளியவாறே, பொற்றாமரை யின் வடகீழ் மூலையில், பெட்டகத்தொடும் அட்டமூர்த்தியைப் பெற்று நட்டம் ஆடினார். இட்டமாப் பூசிக்க எண்ணுவரோ? சிவாகம விதிப்படி வழிபட விரும்பினார். அதுகுறித்து ஆண்டவனை வேண்டினார். கால்மாறினான் அதற்குப் பால்மாறுவனோ? திருவாரூரில் ஞானப்பிரகாச முனிவரிடம் உபதேசமும் பூஜையும் ஏற்கப் பணித்தருளினான். இருவர் கனவிலும் அதற்கேற்ற அருள் நிகழ்ந்தது,

திருவாரூரில் - சித்தீச்சரத்தில் தென்முகக்கடவுள் திருமுன் பக்குவசீடரை அருட்குரு எதிர்நோக்கியிருந்தார். அங்குச்சேர்ந்த பிள்ளையார், காந்தம் கண்ட இரும்பேபோல விரைந்துற்றார். அபயம் பெற்றார். சிவதீக்ஷையும் சிவபூஜையும் எய்தினார். நாள்தோறும் சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. குரு தோத்திரமே ஞானப்பிரகாசமாலை.

ஒருநாள் பூங்கோயில் வழிபாடு. மடத்துவெளியே குருநாதர் 'நிற்க' என்று பணித்தருளினார். குருவாணை கடவாதவர் ஆதலின் கைவிளக்கோடு நின்றார். அசைந்தாரல்லர். மழையோ அவரைச்சுற்றி மூன்றடிக்கு அப்பாலேயே பெய்தது. குரு பத்தினியாருக்கு விடியலில் அவ்வுண்மை தெரிந்தது. குருவும் அதுகேட்டுச் சென்று நோக்கி, உள்ளுருகி விழிநீர் பெருகி, அணுகித்தழுவி 'யாம் வணங்கும் கடவுள் வேறுண்டோ' என்று மொழிந்து, அதிதீவிர பக்குவியான உமக்கு, இனி இங்கு யாது உண்டு? நினைத்த இடத்தில் சென்று ஓடிவரும் காரணர்க்கு உபதேசம் புரிந்து, சமய பரிபாலனம் செய்க என்றார். உவப்பத் தலைக் கூடியவர் உள்ளப் பிரியும் நிலையினரே ஆயினும்,

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்இச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ? இணங்கார் புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பர இன்று
உனக்கு இச்சை எப்படி? அப்படி ஆக உரைத்தருளே."

என்று வேண்டினார். தருமபுரத்திற்குச் செல்க எனப்பணித்தருளினார் கமலை முனிவர்.

குருவாணைப்படித் தருமபுரத்தை அடைந்தார். சைவ சமய பரிபாலனம் புரிந்துவந்தார். ஞான நூல்கள் பல அருளினார். ஆனந்தபரவசர் முதலிய பலரை ஞான பரம்பரையில் நிலவச் செய்தருளினார் தருமையாதீன மடாலயத்துக் குருமுதல்வர்.

ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம்—பாலொளியாம்
அத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவா யா.

— சொக்கநாத வெண்பா.

1—6—64 திங்கட்கிழமை

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜை விழா

காலை 10 மணிமுதல்

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

விழாமலர்:

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

ஏழாந் திருமுறை

மாலை 6 மணிக்கு

கனகாபிஷேகம் கொண்டருளிய

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளிக்

குருமூர்த்த வழிபாடு செய்தருளல்

2—6—64 செவ்வாய்க்கிழமை

காலை 11 மணிமுதல்

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

பகல் 12 மணிமுதல்

மாகேஸ்வரபூஜை

இரவு

பட்டணப்பிரவேசம்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23] சோபகிருது - சித்திரை - 10—5—64 [இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

அருட்கடலும் அன்புக்கடலும்

திருஞானசம்பந்தப் பெருமான் திருமணம் கொண்ட திருத்தலம் ஆச்சாள்புரம் என வழங்கும் நல்லூர்ப் பெருமணம் ஆகும். இத்திருத்தலம் தருமையாதீனத்தின் இருபத்தேழு திருக்கோயில்களுள் ஒன்றாக - ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் அருளாட்சியில் விளங்கி வருகின்றது. அருட்கடலாகிய திருஞானசம்பந்த சுவாமிகளது அவதாரத் தலமாகிய சீர்காழியும் தருமையாதீனத் திருக்கோயில் என்பதை நாடறியும். சைவசமயப் பேராசிரியர்களில் முதல்வராக விளங்கும் ஆளுடைய பிள்ளையாரின் அவதாரம், ஐக்கியம் ஆகிய இருபெரு நிலைகளையுடைய இவ்விரு திருத்தலங்களும் ஆதீன ஆட்சியில் இருப்பது பெருமகிழ்விற்குரிய ஒன்றாகும். அண்மையில் நடந்த திருமுலைப்பால் திருநாள் சிவஞானசம்பந்தருடைய தவஞானச்செல்வம் குறித்த தேசீயத் திருநாள். அதில் நிரப்பிய திருவருட்

பேரானந்தம் பெருகிப்பெருகி மனம் குளிர மீண்டும் தழைக்கு மாறு நிகழ்ந்தது ஆச்சாள்புரம் மகாகும்பாபிஷேகம் ஆகும். 29—4—64 அன்று, ஸ்ரீ சிவலோகத் தியாகராஜப்பெரு மான், தம் பாகம் பிரியாத திருவெண்ணீற்றுமையம்மை, ஆளுடையபிள்ளையார் முதல் அனைவருடன் மகாகும்பா பிஷேகம் கொண்டார்.

அன்று அத்தலத்துக் கூடியிருந்த அன்பர்களின் சிந்தையெல்லாம் ஆனந்தவெள்ளம் பாய்ந்தது; அந்த ஆனந்தம் உயிர்க்குக் கிடைக்கும் உயர் சிவானந்தம்; பல பிறவிகள் எடுத்தும் பெறற்கரிய பேரானந்தம். அவ்வா னந்தம் சிற்றருவியாகப் பெருகி, பேராருக வளர்ந்து அன்பர் களுடைய தூய அன்பும் கலந்து எங்கும் பெருகி ஓடிற்று. ஆம்; உணர்வுக்காட்சியில் விளைந்த உயர் அநுபவம் ஆகும் இது. சைவம் தழைக்க, திருவவதாரம் செய்து திருவவதாரத் தால் சரம் அசரம் அனைத்தையும் சிவம்பெருக்கிய ஆளு டைய பிள்ளையார் சிவச்சோதியில் கலந்த சிவலோகத்தைச் சமுதாயமுழுதும் கண்டு இன்புற்ற அற்புதம்கண்ட திருமண் இத்தலத்துப் பெருமை உடையது. அந்தமணக்காட்சியை அகத்திற்கண்ட சேக்கிழார் தெய்வத்தமிழ்க் காட்சி அன்பர் கள் சிந்தைகளிலெல்லாம் தோன்றிற்று. 'முற்றும்மெய்ஞ் ஞானம் பெற்ற மூர்த்தியார்' ஆகிய பிள்ளையார் சேங்கை பற்ற 'தெய்வக்கற்பகப்பூங் கொம்பனுர்' ஆகிய மகளா ரும் இத்தலத்து அன்று காட்சி வழங்கினர்; 'அம்பொன் செய்தீபம்' என்று சொல்லும்படி அம்மங்கையாரும் அலங் கரிக்கப்பெற்றுத் திகழ்ந்தார். சிவசம்பந்திகள் (சிவலோகத் தியாகராசரும், திருவெண்ணீற்றுமையும்) திருவுளம் அழைத்தது. "மறைகளோடு தாரணிஉய்ய ஞானசம்பந்தன் வந்தான்" என்று சின்னங்கள் முழங்கின என்று ஊர்வலத் தொடக்கத்திலே சேக்கிழார் கோடிகாட்டிவிடுகிருர். ஆம்; குருபீடமாக அம்மையே எழுந்தருளித் திருவெண்ணீறு வழங்க உலகமெல்லாம் எளிதாக முத்திபெற்று இன்புற வழிவகுத்த ஞானவள்ளல் அல்லரோ ஆளுடைய பிள்ளை யார்! இத்தகு செல்வரைப் "புண்ணிய விளைவு போல்வார்"

என்றுகூறிப் பூரிக்கின்றது தெய்வச்சேக்கிழார் திருவுள்ளம். ' ஏகமாம் சிவமெய்ஞ்ஞானம் இசைந்தவர் " ஆகிய ஆளுடைய பிள்ளையார் திருமணக்காட்சியை உடன் இருந்து கண்ட புண்ணியம் உடைய அன்பர்கள் அமரர்கள் ஆயினர்; அகத்தால் மட்டும் அன்றிப் புறத்தாலும் அவர் தேவரே என்கின்றார் கற்பனைப் புலவர் சேக்கிழார்; எப்படி ? கண் இமைத்தலை மறந்து நின்றார்களாம் அவர்கள்; தேவர்கள் இயல்பு இஃது அன்றோ ! "மனிதருள் தேவர் ஆனார் கண் இமையாது வாழ்த்தி" அற்புதமான இந்தக்காட்சி மகாகும்பாபிஷேத்தை யோட்டி மெய்க்காட்சியாயிற்று.

தாம் பெற்ற இன்பத்தை எல்லோரும் பெறவேண்டும் எனல் சான்றோர் இயல்பு "ஆறுவகைச் சமயத்தில் அருந்தவரும் அடியவரும், கூறுமறை முனிவர்களும், கும்பிட வந்தணைந்தாரும், வேறு திருவருளினால் வீடுபெற வந்தாரும், ஈறில் பெருஞ்சோதியினுள் எல்லாரும் புக்கதற் பின் " னேதான், காதலியைக் கைப்பற்றிக்கொண்டு தீதகற்ற வந்தருளும் திருஞானசம்பந்தர் சோதியிற்கலந்து ஒன்றி உடன் ஆனார். மகாகும்பாபிஷேகக் காட்சியில் ஈடுபட்ட அன்பு மனங்களில் எல்லாம் இந்த ஆனந்தக் காட்சி பொங்கிப் பொங்கி எழுமாறு மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது.

ஸ்ரீ சிவலோகத் தியாகராஜரும் ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மையும், திருஞானசம்பந்தத் திருப்புதல்வரோடு அருள்மணம் பெருக்கினார்கள். கும்பாபிஷேகத்தையோட்டி பன்னிரு திருமுறை மாநாடு இனிது நிகழ்ந்தது; அகண்ட திருமுறைப்பாராயணம் நிகழ்ந்தது. தமிழ்நாடு அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ் சாரங்கபாணி முதலியாரவர்கள், துணை ஆணையர் திரு. சோமசுந்தர தேசிகரவர்கள் முதலிய பேரன்பர்கள் வந்து தரிசித்து மகிழ்ந்தார்கள். பன்னிரு திருமுறை மாநாட்டில் தமிழ்நாடு செய்தித்துறை அமைச்சர் கனம். பூவராகன் அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை சமயப் பேருரையாக - வழிகாட்டும் நல்லுரையாக இருந்தது.

பலப்பல கும்பாபிஷேகங்களை நிகழ்த்திய பேரருள் அநுபவம் உடைய குருமணியவர்கள் திருவுள்ளம்போலவே இக்காட்சி இனிது நிறைவெய்திற்று. அன்பர்கள் மன மெல்லாம் பெருக்கிய ஆனந்தவெள்ளம் என்றும் நின்று நிலவவேண்டும் என்ற கருத்துடைய அவர்கள் கும்பா பிஷேகமலராக வெளியிட்ட " திருவெண்ணீற்றுமையம்மைப் பிள்ளைத்தமிழ் " அந்த ஆனந்தக்காட்சியின் நிலைக்களமாக என்றும் இருக்கும்; அம்மையின் பேரருள் பிழம்பாக இலக் கிய உலகிலும் நல்லிடம் பெறும் என்பது உறுதி.

இவ்வாறு திருஞானசம்பந்தப் பெருமானுடைய பேரா னந்தத்தில் திளைத்த அன்புலகுக்கு அடுத்து வந்து ஆனந் தம் தருவது சித்திரைச்சதயம். 6—5—64ல் சித்திரைச் சதயம். அன்புக்கடலாகிய அப்பரடிகள் " நண்ணிய சிவா னந்த ஞான வடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் " எழுந்தருளிய திருநாள் இது. திருவாமூரில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் முதலாக எல்லார் அன்பும் சேர்ந்து அப்பரடிகளுக்கு இத்திருநாளில் பெருவிழா நிகழ்ந்தது. வெள்ளிக்கவசம் பூண்டார் தாண்டகவேந்தர்; அப்பர் தேவாரமே அம்மூன்றுநாளும் முழங்கிற்று. தேவாரத்தை நாவார ஓதி நாட்டின் ஆன்மீக வளத்தை அறிஞர் பலரும் பெருக்கினர். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் " அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம் அன்புசெறி கடலும் " போல்வர்; " சைவநெறிதான் பெற்ற புண்ணியக் கண் இரண்டு " அனையவர்; " ஈசன் திருவருளும் அகிலம் எல்லாம் ஈன்ற அம்மையின் திருவருளும் " ஒத்தவர். இது சேக்கிழார் சுவாமிகளது துணிவுரை; பொருள்சேர் புகழுரை இவ்விரண்டு ஞானசிரியர்களுடைய நெறியில் அருட்கடல், அன்புக்கடல், திருநெறியில் உலகம் சென்றால் அமைதி, இன்பம் எல்லாம் உண்டு.

இவற்றை விளக்குவதற்குத் திருவருள் தந்த இணைப் புத்தான் திருமுலைப்பால், ஆச்சாள்புரம் கும்பாபிஷேகம், சித்திரைச்சதயம் ஆகிய மூன்றும் என்பது தெளிவு.

திருத்தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைத் திருநாள்

உலகிற்குச் சான்ருேர்களின் நினைவும், அவர்கள் நெறியில் வாழவேண்டும் என்ற துணிவும் இருந்துகொண்டே யிருத்தல் வேண்டும். அவற்றை மறக்கும்போதெல்லாம் அந்த நினைப்பையும் துணிவையும் எடுத்துக்காட்டுதல் அருளாளர் இயல்பாகும். தருமையாதீனத்தை நிறுவிய ஆதி குருஞானசம்பந்தப்பெருமான் இவ்வாதீனத்தை நிறுவியருளி, உபதேசபரம்பரையை வழி வழி ஓங்குவித்துள்ள உயர்ஞானவேந்தர். அவர் திருவடி பரவி வளர்ந்துவரும் இந்த ஞானப்பண்ணையில் அடுத்தடுத்து அருளரசேற்ற அருள்வேந்தர்கள் நம்முதற்பெருங் குரவர் முன்னிய நெறிப்படியே மெய்ம்மையாம் உழவும் அதனல் சிவகதி விளைவும் உண்டாக்கி வருதலை உலகறியும். இப்போது இருபத்தைந்தாவது குருஞானசம்பந்தராக எழுந்தருளி யிருப்பவர்கள் கனகாபிஷேகம் கொண்டருளிய கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள். ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை 1—6—64 அன்று வருகிறது. குருபக்தி, லிங்கபத்தி, சங்கமபத்தி களிற் சிறந்த கயிலைக் குருமணியவர்கள் குருபூஜையை வழக்கம் போல் மிகச்சிறப்புற நிகழ்த்த அருளுள்ளம் கொண்டுள்ளார்கள்.

ஞானவடிவில் விளங்கும் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமான் குருபூஜையை யொட்டி திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும் குருபூஜைக்கு முன் பத்து நாட்கள் தொடங்கி நிகழும். தமிழ் நாட்டின் அன்புச் செல்வர்கள், அறிவுச்செல்வர்கள் அனைவரும் பங்குகொள்ளும் கலைவிழாவாக, இலக்கிய விழாவாக, பக்திப் பெருவிழாவாக இஃது இருக்கும்.

இக்குருபூஜைநாளில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய "பஞ்சசீலங்கள்" அடங்கிய ஒரு திருப்பாடலை ஓதி, ஞானசம்பந்தம் தன்வாசக நேயர்கள் அனைவர்களுக்கும் குருபூஜைச் செல்வ மேன்மையினைத் தெரிவிக்க விரும்புகிறது.

"பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்
வரவரக் கண்டாராய் மனமே—ஒருவருக்கும்
தீங்கு நினையாதே செய்ந்நன்றி குன்றாதே
ஏங்கி இளையா திரு."

1. பரபரப்பு இன்மை, 2. வரவரக்கண்டு ஆர்தல், 3. தீங்கு நினையாமை, 4. செய்ந்நன்றி குன்றாமை, 5. ஏங்கி இளையாமை ஆகிய ஐந்து பஞ்சசீலங்களை உலகிற்கு இத் திருப்பாடலின் வாயிலாக வழங்கியருளியுள்ளார்கள் ஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்.

ஸ்ரீ குருஞானசம்பந்தப்பெருமான் திருவடி வாழ்க!

புதிய ஆளுநர்க்கு நல்வரவு

ஒரு நாட்டின் தலைவராக வருகிறவர்கள் அந்த நாட்டின் பாரம்பரியமான கலாசாரங்களில் பற்றுக் கொண்டவராகவும், திறமை வாய்ந்தவர்களாகவும், இருந்தால் அதனால் நாட்டிற்குப் பெரும்பலன் விளையும்; அவர்களால் நாட்டிற்கும் பெருமை. நம் தமிழ்நாட்டின் புதிய ஆளுநராகப் பதவி ஏற்றுள்ள மைசூர் மன்னர் கனம் ஜெயசாமராஜ உடையாரவர்கள் இவ்வகைக்குச் சரியான எடுத்துக் காட்டாவார்கள். மைசூர் மாநிலத்தின் மன்னராக இருந்து ஆண்டும், அதே மாநிலத்தை ஆளுநராக இருந்து ஆண்டும் வந்துள்ள அனுபவம் மிகுந்துள்ளவர்கள், தமிழ்நாட்டிற்கு இவர்கள் தலைமை கிடைத்திருப்பது, அதிலும் இத்தருணத்தில் கிடைத்திருப்பது பெரிய பேறு என்றே கூற வேண்டும்.

பாரதநாட்டின் கலாசாரங்களில் அழுந்திய நம்பிக்கையும் உறுதியும் உடைய திரு. ஆளுநர் அவர்கள் அயல்நாடு சென்று கற்றுவந்த உலகானுபவம் உடையவர்.

பரந்த கல்வியும், சிறந்த புலமையும் உடைய உயர்ந்த பேச்சாளர்; உறுதியான செயல்வீரர்.

வடமொழியில் தகுந்த புலமையுடைய ஆளுநர் சிறந்த கவிஞரும் கூட என்று அறியவும் பெருமகிழ்வு அடையாத தமிழ் நெஞ்சம் இல்லை.

செந்தமிழ்ச் சொக்கர் திருவருளையும், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மஹாலட்சுமி துர்க்காதேவியின் பேரருளையும் தேக்கிய ஞான வேந்தராகிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் அருளாசி ஆளுநர் அவர்களுக்கு என்றும் துணைநிற்கும்.

ஸ்ரீஜெய சாமுண்டேச்வரியின் திருவருளைப் பரிபூரணமாகப் பெற்று, அதனுல் விளக்கம் பெற்றுள்ள இவ்வேந்தரை ஆளுந ராகப் பெற்றுத் தமிழகம் பெருமகிழ்வு எய்தும் நேரத்தில் "ஞானசம்பந்தம்" தன் அன்பான நல்வரவை ஆளுநரவர் களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றது.

அறநிலையங்களிடத்து அன்பு உடையவர் மன்னர் அவர்கள்; அறநிலையங்கள் செழித்தாலேயே அவனியும் செழிக்கும் என்ற பாரதப் பண்பாடு நிறைந்த நேரிய நெஞ்சுடைய சீரியர். அவ ருடைய அன்புநிறைந்த, தத்துவச் செழிப்புடைய விரிந்த மனப் பான்மையென்னும் வெண்கொற்றக் குடைக்கீழ் தமிழகம் எல்லா நலங்களும் பெற்று இனிது தழைக்கும் என்பது எம் அசையா நம்பிக்கை.

வாழ்க புதிய ஆளுநர் !

வெல்க ஆளுநரின் நற்பணிகள் !

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Thirubuvanam.

இன்றைய தினம் கம்பகரேசுவரர், அறம்வளர்த்தநாயகி, சரபர் சந்நிதிகள் இறை அருளைப் பணியும் பேறு கிடைத்தது. மிகப் பெரிதும் மகிழ்வுற்றேன். வணக்கத்திற்குரிய தருமபுர ஆதீனம் அவர்களின் பார்வையில் இருக்கும் இக்கோயில் கவனிக் கப்பெற்று வரும் முறை மற்றையோருக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. கோயில் நிர்வாகிகளின் அன்பும், பரிவும் இறை அருள் பெற வருவோர்க்கு நல்ல முறையில் அமைந் துள்ளது.

(Sd.) G. Karupiya Moopanar,

19—4—64.

வணக்கம்

இத் திங்களின் ஞானசம்பந்தம் இதழில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் உண்மை விளக்கம் என்னும் சாத்திர நூலின் சிந்தனையாக அருளுரை வழங்கி யருளியுள்ளார்கள். உண்மை விளக்கத்தின் பிழிவாக சிறந்த கருத்துக்களை இவ்வருளுரையில் எளிய நடையில் அருளியுள்ளார்கள். "அருட் கடல் அன்புக் கடல்" என்ற தலையங்கமும் குருபூஜை விழா பற்றிய துணைத் தலையங்கமும், சென்னைமாநில ஆளுநராகப் பதவி ஏற்றிருக்கும் ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் அவர்களுக்கு அளிக்கும் நல் வரவேற்பாக அமைந்த துணைத் தலையங்கமும் இவ்விதழை அணிசெய்கின்றன.

எல்லாவற்றிலும் சிறப்பாகத் தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருபூஜை விழா நிகழ்ச்சியும். இவ்விதழில் இடம்பெற் றுள்ளது. வழக்கம்போல் சித்தாந்த வினாவிடை, சகஸ்ராகமம், தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரை முதலிய தொடர் கட்டுரைகளும், "யாம் இரப்பவை", "தமிழ்கூறும் நல்லுலகு" என்ற தலைப்புக்களில் வெளியாகும் புதிய கட்டுரை களும், செய்திகள், எதிர்காலம் முதலியனவும் வாசகர்களுக்கு நல்விருந்தாகும்.

செய்திகளில் ஆச்சாள்புரம் கும்பாபிஷேக விழா நிகழ்ச்சி, கும்பாபிஷேக விழாவில் கலந்துகொள்ளாதவர்களும் பயன் பெறும் வகையில் அமைந்துள்ளது. ஞானசம்பந்தம் வாசகர்கள் பெற்றுப் பயனடைவார்களாக.

உ
குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

உண்மை விளக்கம்

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாயநம என்னும் திருவெழுத்தைந் தாலே
அவாயமற நின்றாடு வான்.

— திருவதிகை மனவாசகங்கடந்தார்.

எப்பொருளை உணரினும், அதனது பொதுமையை மட்டும் உணராது, உண்மையை உணர்தல் வேண்டும். அதிலும் விளக்கமாக உணர்தல் வேண்டும். ‘உண்மை’ என்பதே வட மொழியில், ‘தத்துவம்’ எனப்படுகின்றது. உண்மையை உணர்தலே எல்லாவற்றிலும் மேலானதாதலின், அதனை உணர்விக்கும் தத்துவ சாத்திரங்கள், ஏனைய எல்லா நூல்களிலும் மேலானவையாக மதிக்கப்பெறுகின்றன.

சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்று ‘உண்மை விளக்கம்’ என்னும் பெயருடன் விளங்குகின்றது, அஃது, உண்மையை (தத்துவத்தை) நன்கு விளக்குவது. சைவ சித்தாந்தத்தில், உலகிற்கு முதனிலையாய் உள்ள கருவிகளே தத்துவம் என்னும் பெயரால் சொல்லப்படும். அவை முப்பத்தாறு. அம் முப்பத்தாறு தத்துவங்களின் விளக்கமே உண்மை விளக்கத்தின் தொடக்கத்தில் உள்ளது.

என்றும் அழியா உண்மைப் பொருள்களாக, மூன்று பொருள்களைச் சைவ சித்தாந்தம் கூறும். அவை "பதி, பசு, பாசம்" என்பன. இவை முறையே, 'இறை, உயிர், தளை' என்பனவாம், இறையாகிய பதி ஒன்றே: உயிராகிய பசுக்கள் அளவிறந்தன. தளையாகிய பாசம் மூன்று; அவை, 'ஆணவ, மாயை, கன்மம்' என்பன. இவைகளை இங்குக் காட்டியபடி' பதிமுதலாக எடுத்துச் சொல்வது, மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் முறையாகும். பாசத்திலிருந்து எடுத்துச் சொல்வது, கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும் முறையாகும். கீழ்க்கீழ் உள்ள பொருள்கள், மேன்மேல் உள்ள பொருளைவிடத் தூலமானவை - எளிதில் விளங்குபவை. மேன்மேல் உள்ள பொருள்கள், சூக்குமமானவை - அரிதில் விளங்குபவை. அதனால் இவைகளை எளிதில் விளங்கும் முறையில், கீழிருந்து எடுத்துக் கொண்டு விளக்குகின்றது, உண்மை விளக்கம்.

மூவகைப் பாசங்களில் மாயையே, முப்பத்தாறு தத்துவங்களாய் நிற்கும். அவற்றின் இயல்புகளைக் கூறியபின்னர், ஆணவ கன்மங்களின் இயல்புகளையும், அவற்றிற்குப்பின் பசு, பதி, இவற்றின் இயல்புகளையும் விளக்குகின்றது இந்நூல்.

பதினன்கு சாத்திரங்களும் ஏதேனும் ஒருமுறையில் முப்பொருளின் இயல்புகளை விளக்குவனவே. ஆயினும், ஏனைய சாத்திரங்கள் விளக்காத ஒரு பெரிய உண்மையை உண்மை விளக்கம் விளக்குகின்றது. அவ்வுண்மையாவது, அம்பலவாணரது அருட்கூத்தின் உண்மை அல்லது நடராசதத்துவம், இதன்பின்னர் அஞ்செழுத்து, முத்திநிலை என்பவற்றைக் கூறி, இறுதியில் முத்தி அடைவதற் குரிய சாதனத்தைச்சொல்லி முடிக்கின்றது,

இந்நூல், சந்தான முதற்குரவராகிய மெய்கண்டார் மாணவர்களுள் ஒருவரான, 'திருவதிகை மனவாசகங் கடந்தார்' என்பவரால் செய்யப்பெற்றது. இதில் உள்ள பொருள்கள் அனைத்தையும் அவர், தாம் வினவிய வினாவிற்குத் தம் ஆசிரியர் அருளிய விடையாகவே அருளிச்செய்துள்ளார்.

எப்பொருளின் இயக்கத்திற்கும் இறைவனது இயக்கமே மூலமானது. அந்த இயக்கத்தையே நாம் அவனது அருட்கூத்து

என்கின்றோம். இந்த அருட்கூத்தின் உண்மை, உண்மை விளக்கத்திலேதான் பேசப்படுகின்றது. தொடக்கத்தில் மாணுக்கர் ஆசிரியரை வினவும் வினக்கள் அடங்கிய வெண்பா,

"ஆருறு தத்துவம்ஏது ஆணவம்ஏது அன்றேதான்
மாரு வினைஏது மற்றிவற்றின் - வேருகா
நான்ஏது நீஏது நாதன்நடம் அஞ்செழுத்துத்
தான்ஏது தேசிகனே சாற்று"

என்பது. இதனுள் 'நாதன் நடம் ஏது? என்று மாணவர் வினவுவதைக் காண்கின்றோம். பின்பும், உரிய இடத்தில்,

"நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத்து அஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்ருடல் உள்ளபடி - பெற்றிடநான்
விண்ணுர் பொழில்வெண்ணெ மெய்கண்ட நாதனே
தண்ணுர் அருளாலே சாற்று"

என்று வினவுகிருர். அவ்வினுவிற்கு விடையாக, அருளிச்செய்யத் தொடங்குகின்ற வெண்பாவே தலைப்பில் காட்டப்பட்டது. எல்லா இயக்கத்திற்கும் மூலமாகிய நாதன் நடனத்தை இவ்வுண்மை விளக்கம் வாயிலாக அனைவரும் இன்றியமையாது உணர்தல்வேண்டும், "கூடல் ஆலவாயிலாய் - நின்றயங்கி ஆடலே நினைப்பதே நியம்மமே" என்ற ஞானசம்பந்தர் அருள் வாக்கினுல், நாள்தோறும் தவருது நியமமாக யாவரும் நினைக்க வேண்டுவது, நாதன் நடனத்தையே என்பது, ஐயமற விளங்கும்

இறைவன் எங்கும் நிறைந்தவன்: உருவம் இல்லாதவன். அவன் நடனம் புரிகின்ருன் என்ருல், அதற்கு ஓர் இடம் வேண்டும்; உருவம் வேண்டும். அந்த இடம் யாது? இவ்வினக்கள் இயல்பாக எழுகின்றன. இவற்றுள் இடம் இன்னது என்பதனையே, "எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே" என்று அருளினுர்.

லிங்கம் - குறி, அஃது 'ஆதாரம்' அல்லது 'இடம்' என்ற பொருளில் வந்தது. 'எட்டும் இரண்டும் உருவான இடம்' என்ருல், அஃது எந்த இடம்?

'எட்டும் இரண்டும்' என்பது, நம்நாட்டில் மறைபொருளாக வழங்கப்பட்டு வரும் ஒரு பழைய வழக்கு. இதற்குப்பலபொருள் கூறுவர்.

தமிழில் 'எட்டு' என்னும் எண்ணினைக் குறிக்க, 'அ' என்னும் எழுத்தையும், 'இரண்டு' என்னும் எண்ணினைக் குறிக்க, 'உ' என்னும் எழுத்தையும் ஆள்வது மரபு. ஆகவே 'எட்டும் இரண்டும்' என்பது, எழுத்தறி கல்வியில் தொடக்கத்தில் கற்கப்படும் 'அ, உ' என்னும் எழுத்துக்களையே குறிக்கும் என்று சொல்லி, அதற்கு, 'அ உ அறியா அறிவில் இடைமகனே' என்ற ஒரும் பழம் பாடலை எடுத்துக்காட்டாகக் காட்டுவர். இனி,

„கட்ட றுத்தெனை ஆண்டுகண் ணாரநீ
றிட்ட அன்பரோ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே"

என்ற மணிவாசகர் திருவாக்குப் போன்ற இடங்கட்கு மேற் சொன்ன பொருள் பொருந்தாமையால், 'எட்டும் இரண்டும்' என்பது, பிரணவகலைகளாகிய அகார உகாரங்களையும், அவை வழியாகச் செய்யப்படும் வாசியோகத்தையும் குறிக்கும் என்று கூறுவர்.

சைவ சித்தாந்தத்தில் இவை எல்லாவற்றிற்கும் வேறான ஒருபொருளே சொல்லப்படும். அஃதாவது, எட்டும் இரண்டும் கூடினால் பத்து. 'பத்து' என்னும் எண்ணினைக் குறிக்கும் எழுத்து 'ய'. பஞ்சாக்கரத்தில், 'ய' என்னும் எழுத்து உயிரைக் குறிப்பது; ஆதலின், எட்டும் இரண்டும் என்பது, ஆன்மாவைக் குறிக்கும்' என்பது. ஆகவே, 'எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே' என்றது, 'பத்தின் அறிகுறியான 'ய' என்னும் எழுத்தால் குறிக்கப்படும் ஆன்மாவாகிய இடத்தில்' என்றபடியாம்.

உடம்பெங்கும் உயிர் நிறைந்திருப்பினும் இரண்டிடங்களை உயிர் சிறப்பாகப் பற்றி நிற்கும். அவை, 'இருதயம், புருவநடு என்பன. உயிர் சிறப்பாகப் பற்றி நிற்கும் இந்த இரண்டிடங்களிலும் அகத்திலே இறைவனது நடனம் நடைபெறுவதாகும். நடனம்புரியும் இடம் திறந்த வெளியாய் இருத்தல்வேண்டும். அதனால், மேற்சொல்லிய இரண்டு இடங்களும் 'அம்பலம்'

என்று சொல்லப்படும். இனிப் புறத்திலே தில்லை அம்பலத் துள்ளே இறைவன் நடனம் புரிகின்றான். இவற்றையே மணிவாசகர்,

" சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும் என
சிந்தையுள்ளும் - உறைவான் "

என்று திருக்கோவையாரில் அருளிச்செய்தார். எனவே, உயிரின் அறிவு நிலைத்து நிற்கும் இருதயத்திலும், விளக்கம்பெற்றுத் திகழும் புருவநடுவிலும் அவ்வறிவை இடமாகக்கொண்டு உயிரை நிலைப்பித்தும், அறிவித்தும் இறைவன் அருள்நாடகம் ஆடுகின்றான் என்பது விளங்கும்.

'இடம் ஆன்ம அறிவு; உருவம் எது?' என்பதற்கு விடையாக, " சிவாயநம என்னும் திருவெழுத்தைந் தாலே " என்றார். எனவே, 'பஞ்சாக்கரத்தைத் திருமேனியாகக்கொண்டு இறைவன் நடனம் புரிகின்றான்' என்றதாம். ஆன்மாவின் அறிவு தொழிற்படுதற்கு இன்றியமையாத் துணையாய் உள்ளது நாதமே. ஆகவே, அத்தொழிற்பாட்டினை நிகழ்வித்தற்கு நாதத்தில் தோன்றிய மந்திரங்களையே 'இறைவன் தனக்கு வடிவமாகக் கொள்கின்றான்.' அம்மந்திரங்கள் பல இருப்பினும் திருவைந் தெழுத்து மந்திரமே சிவபிரானுக்குச் சிறந்ததாகலின், அதனையே தனக்குத் திருமேனியாகக்கொண்டு அப்பெருமான் ஆன்ம அறிவினிடத்து விளங்குகின்றான்.

அஞ்செழுத்தின் உண்மைகள் பலவற்றைச் சிவஞான சித்தியார் பின்வரும் செய்யுளால் குறிப்பாக உணர்த்துகின்றது.

" அஞ்செழுத்தால் ஆன்மாவை அரன் உடைய பரிசும்
அரன் உருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் [அறிந்திட்டு
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
அஞ்செழுத்தால் ஆன்மாவின் இதயத்து அர்ச்சித்து
அஞ்செழுத்தாற் குண்டலியின் அனலை ஓம்பி
அணைவரிய கோதண்டம் அணைந்து அருளின் வழிநின்று
அஞ்செழுத்தை விதிப்படிஉச் சரிக்க மதி அருக்கன்
அணைஅரவம் போல்தோன்றும் ஆன்மாவில் அரனே ".

இதனுள் குறிப்பாகச் சொல்லப்பட்டவைகளில், ஆன்மாவை அரன் உடைய பரிசினை அஞ்செழுத்தால் அறிதலையும், அரன் உருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையை அறிதலையும் இந்நூல் விளக்கமாகத் தெரிவிக்கின்றது,

" சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும்
அவன் எழுத்து அஞ்சின் அடைவாம் "

என்பதனால், அஞ்செழுத்தின் உட்பொருள் விளங்கும். இவற்றைச் சிகாரம் முதலாக வைத்துக் காண்க.

எல்லா இயக்கங்களும் இறைவன் இயக்கத்தினாலே நிகழ்கின்றன என்பது உண்மை. "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்பது, பெரியதோர் ஆப்தமொழி, அவ்வாறு எல்லாவற்றையும் அசைவிக்கும் அசைவே ஆண்டவனது அருள் நடனம். அவ்வசைவினால் நிகழும் தொழில்கள் அளவிறந்தனவாயினும், அவை ஐந்து வகையுள் அடக்கிச் சொல்லப்படும். அவை, 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்பன.

நடனங்கள் யாவும், அவற்றைக் காண்கின்றவர்களுக்குச் சில குறிப்புக்களை விளக்கியே நிற்கும். சிவபிரானது நடனம், 'ஐந்தொழிற்கும் தானே முதல்வன்' என்பதை உணர்த்தும். அதனால் அது, 'பஞ்ச கிருத்திய நடனம்' எனப்படும். கூத்தப் பெருமானது நடனத்தில் ஐந்தொழிலும் விளங்குவதை,

" தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு "

என விளக்குகின்றது உண்மை விளக்கம். தமருகத்தை அசைத்து நாதத்தை உண்டாக்கும் கை, உலகைத் தோற்றுவித்தலைக் குறிக்கும், அபயம் தரும் கை காத்தலைக் குறிக்கும், தீ ஏந்திய கை அழித்தலைக் காட்டும். முயலகனை மிதித்துள்ள திருவடி மறைத்தலைத் தெரிவிக்கும். தூக்கிய திருவடி பிறவியினின்றும் எடுத்துத் தன் திருவடி நிழலில் வைத்து அருளுதலை உணர்த்தும்.

இப்பஞ்ச கிருத்தியங்களும் பாசத்தில் உள்ள உயிர்கட்கே பொருந்தும்; அதனால், இஃது 'ஊன நடனம்' எனப்படும். இனிப் பாசத்தில் நீங்கிய முத்தான்மாக்களிடத்து இறைவன் செய்யும் அருட் செயல்களும் இந் நடனத்தினாலே குறிக்கப்படும். அது,

"மாயை தனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தான்எடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்
தான்எந்தை யார்பரதந் தான்"

என விளக்கப்படுகின்றது.

தமருகத்தை அசைக்கும் கை, மாயையை உதறும். தீ ஏந்திய கை கன்மத்தைச் சுடும். முயலகனை மிதித்த திருவடி ஆணவ மலத்தை அமுத்தி யொழிக்கும். தூக்கிய திருவடி அருள் வடிவாக்கி உயர்த்திப் பேரின்பத்தில் மூழ்குவிக்கும். இது, 'ஞான நடனம்' எனப்படும்.

'பெத்தான்மாக்கள், முத்தான்மாக்கள்' என்னும் இரு வகை ஆன்மாக்களுக்கும் செய்யும் இருவகையான அருட் டொழில்களை உணர்த்துதற்குச் செய்யப்படும், 'ஊன நடனம், ஞான நடனம்' என்ற இருவகை நடனத்திற்கும் சிவபிரான் கொண்ட திருமேனி பஞ்சாக்கரத் திருமேனி என்பது முன்னே சொல்லப்பட்டது. பஞ்சாக்கரத்தை நகாரம் முதலாக வைத்து ஓதுதல், சிகாரம் முதலாக வைத்து ஓதுதல் என இருமுறைகள் உண்டு. அவை முறையே, 'ஸ்தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம்' எனப்படும். இவை இரண்டும் இறைவனுக்குத் திருமேனியாய் அமையும்பொழுது, இருவகையாகவே அமை கின்றன. அந்த இருவகையினையும் கீழேகாணும் இரு வெண்பாக் களா ல்அறியலாம்.

"ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம்;—கூடும்
மகரம் உதரம்; வளர்தோள் சிகரம்;
பகருமுகம் வா; முடி ய பார்"

(உதரம்—வயிறு. முடி—சிரசு) இது தூல பஞ்சாக்கரம்.

"சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கில் இறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்"

(துடி—உடுக்கை. அங்கி—நெருப்பு) இது, சூக்கும பஞ்சாக்கரம். இவ்வாறு அமைந்த திருமேனிக்குப் பிரணவமே திருவாசி யாகின்றது, "ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்—நீங்கா எழுத்தே நிறை சுடராம்" என்றது காண்க. எழுத்து என்றது ஐம்பத்தோர் அக்கரங்களே.

ஊன நடனம், ஆன்மாக்களுக்குப் பஞ்ச கிருத்திய முறையில் பாசத்தைச் சிறிது சிறிதாக நீக்கி, முடிவில் பேரின்பத்தை அடையச் செய்யும்; ஞான நடனம், பேரின்பத்தைத் தலைப் பட்டவர்க்கு அவ்வின்பத்தை மேலும் மேலும் பெருகச் செய்து அதினின்றும் நீங்காதவாறு, அதன்கண் மூழ்குவிக்கும். ஆகவே இரண்டு நடனங்களும் ஆனந்த நடனமே என்கின்றது உண்மை விளக்கம். அதனால் கூத்தப்பெருமானது நடனம் யாவர்க்கும் ஆனந்தத் தாண்டவமேயாம்.

"நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்--சொரியும்
குனிப்பு"

என்பது திருவாசகம். இவ்வானந்தத் தாண்டவத்தைத் தரிசித் தால், சிவானந்தத்தை அறியாதவர்க்கும் சிவானந்தம் தோன்றும் என்பதை,

"புளிக்கண் டவர்க்குப் புனல்ஊறு மாபோல்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
துளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்குள் ஆனந்தத் தமுதூறும் உள்ளத்தே"

என்ற திருமந்திரத்தால் அறியலாம். ஞானசம்பந்தர் முதலிய மூவரும் இத்திருக்கூத்தைத் தரிசித்தபொழுது அடைந்த பேரா னந்தத்தை அவர்கள் திருப்பதிகங்களிலும், திருத்தொண்டர் புராணத்திலும் நன்கு விளங்கக் காண்கின்றோம்.

அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே
யானஅம் பலமும்தம்
உள்நி றைந்தஞா னத்தெழும் ஆனந்த
ஒருபெருந் தனிக்கூத்தும்

கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழுங்
களிப்பொடுங் கடற்காழிப்
புண்ணி யக்கொழுந் தனையவர் போற்றுவார்
புனிதர் ஆடியபொற்பு.

உணர்வின் நேர்பெற வருஞ்சிவ போகத்தை
ஒழிவின்றி யுருவின்கண்
அணையும் ஐம்பொறி யளவினும் எளிவர
அருளினை யெனப்போற்றி
இணையில் உன்பெருங் கருணையே யேத்திமுன்
எடுத்தசொற் பதிகத்திற்
புணரு மின்னிசை பாடினர் ஆடினர்
பொழிந்தனர் விழிமாரி.

இது, ஞானசம்பந்தர் ஞான நடனத்தைத் தரிசித்த அநுபவம்.

நீடுந் திருவுடன் நிகழும் பெருகொளி
நிறைஅம் பலம்நினை அறநேரே
கூடும் படிவரும் அன்பால் இன்புறு
குணமுன் பெறவரு நிலைகூடத்
தேடும் பிரமனும் மாலும் தேவரும்
முதலாம் யோனிகள் தெளிவொன்று
ஆடுங் கழல்புரி அமுதத் திருநடம்
ஆரா வகைதொழு தார்கின்றார்

கையுந் தலைமிசை புனைஅஞ் சலியன
கண்ணும் பொழிமழை யொழியாதே
பெய்யுந் தகையன கரணங் களுமுடன்
உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்
மின் தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்.

இது, நாவுக்கரசர் நாதன் நடனத்தைத் தரிசித்த அநுபவம்.

(தொடர்ச்சி 361 ஆம் பக்கம் பார்க்க)

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானம்
ஸ்ரீ சுவாமிகோவில் சந்நதி வெள்ளிக்கதவுத் திறப்புவிழா

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் — சென்னை சட்டசபை சபாநாயகர், கனம், S. செல்லப்பாண்டியன் B. A., B. L., தஞ்சாவூர் இந்துமத சமய அரசியல் துணை ஆணையர், ஸ்ரீK. சோமசுந்தரதேசிகர் அவர்களும்.

தருமையாதீனம் ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜஸ்வாமி ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் :

கும்பாபிஷேக முடிவில் சென்னை இந்து அறநிலைய ஆணையர் திரு. மா. செ. சாரங்கபாணி முதலியார் அவர்களுக்குப் பரிவட்டம், பிரசாதம் வழங்கல்.

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

(மலர் 23. இதழ் 5, பக்கம் 300 இன் தொடர்ச்சி)

உலகிற்கு முதல்வன் ஒருவனே

மாணுக்கன்: அடிகள் காட்டிய ஆய்வு நெறி பெரிதும் அருமையுடையதே. எனினும், படைத்தற் கடவுளே உலகத்தை முதலிற் படைத்தவனாதலின், அவனே இறுதியில் அழித்தற் கடவுளோடு சேர்த்து எல்லோரையும் அழிப்பனெனக் கூறுவார் உளராயின், அதனை, 'பொருத்தம் அற்றது' எனக்கூறுதல் எவ்வாறு ?

ஆசிரியர்: படைத்தல் முதலிய எல்லாத் தொழிலும் ஒரு முதல்வனுடையனவேதாம். அதனால் அவனைப் படைத்தற் கடவுள் என்று கூறினும், காத்தற் கடவுள் என்று கூறினும், அழித்தற் கடவுள் என்று கூறினும் எவ்வாறு கூறினும் ஒன்றே. எனினும், 'அம்முதல்வன் இன்னான்' என்னும் துணிவு பிறவாத பொழுது, ஓரோவொரு தொழிற் குரியராகச் சொல்லப்படுவோர் எல்லாரையும் அவ் ஒவ்வொரு தொழிலே வல்லவராக வைத்து ஆராய்தல் வேண்டும். அங்ஙனம் ஆராயுங்கால், ஒருவனே ஏனைத் தொழிற்கும் வல்லவனாய் உளன் என்பது தானே பெறப் படுமாயின், அதனை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேற்கூறியவாறு அழித்தல் தொழிலை வைத்து ஆராயுமிடத்தில்தான் அவ்வாறு பெறப்படுகின்றது. படைத்தல் தொழில் காத்தல் தொழில்களை வைத்து ஆராயின். அத்தொழிலைச் செய்பவரிடத்து ஏனைய தொழில்களை வேண்டா நிலைமையில் வலிதிற் புகுத்துவதாய் முடிகின்றது ஆதலின், முதற்கடவுள் முத்தொழிற்கும் உரியவனாயினும், அழித்தற் றொழிலைச் சிறப்பாக உடையவனாக வைத்து விளக்குதலே நேரிதாதல் உணர்க

இன்னும், 'அழித்தல்' என்பது தூலநிலையில்உள்ளவற்றைச் சூக்கும நிலையிற் படுத்து ஒடுக்குதலே என்பதும், 'படைத்தல்,

என்பது, சூக்கும நிலையில் உள்ளவற்றைத் தூல நிலையிற் கொணர்தலே என்பதும், 'காத்தல்' என்பது அங்ஙனம் தூல நிலையிற் கொணர்ந்தவற்றை அந்நிலையிலே நிறுத்துதலே என்பதும் முன்பு சற்காரிய வாதத்தை விளக்கு மிடத்தில் நன்கு விளக்கினோம். சங்காரத்தை. "ஒடுங்கின சங்காரம்" எனமெய் கண்டதேவர்குறித்ததும் இதுபற்றியேயாம். சூக்குமம்காரணமும், முன்னே உள்ளதும், பெரியதும், நிலைபேறுடையதும், தூலம் காரியமும், பின்னேதோன்றுவதும், சிறியதும். நிலையில்லாததும் ஆகையால், சூக்குமத் தொழிற்குத் தலைவன் காரணனும். முன்னே உள்ளவனும், பெரியோனும், நிலைபேறுடையவனும் ஆவன் என்பதும், தூலத் தொழிற்குத் தலைவர் காரியரும், பின்னே தோன்றுவோரும், சிறியோரும், நிலையில்லாதவரும் ஆவர் என்பதும் நுண்ணுணர்விஞர்க்கு விளங்காமற்போகா. ஆகவே, காரணனாகிய அழித்தற் கடவுள் தொழிற் படுத்தும் தலைவனும், காரியராகிய ஏனையோர் அவனால் தொழிற்படுத்தப் பட்டு அவன் ஏவல்வழி நிற்போரும் ஆதல் வெளிப்படை. இவை யெல்லாம் பற்றியே மெய்கண்டதேவ நாயனார் "சங்கார காரணனு யுள்ள முதலையே முதலாக உடைத்து இவ்வுலகம்" என்றும், "அந்தம் ஆதி" என்றும், "சங்காரமே முதல்" என்றும் அருளிச்செய்தார். இவற்றுள், பின் இரண்டிடங்களில்; அந்தம், 'சங்காரம் என்பன, பான்மை வழக்கால், அத்தொழிலைச் செய்வோனைக்குறித்தன.

இன்னும், 'இவ்வுண்மை. காய்தல். உவத்தல் இன்றி நடுவு நிலையினின்று ஆராய்வாருக்கு இயல்பின் விளங்குவதேயாம்' என்பார், 'அந்தம் ஆதி' என்றொழியாது, "அந்தம் ஆதி என்மனார் புலவர்." எனப் புலவர்மேல்வைத்து ஓதியருளினர்.

இவையெல்லாம் பற்றியே, முதற்கடவுளைச் சங்காரத்தொழில் செய்பவனாகவும், முதுகாட்டில் உறைதல். சுடலைப் பொடிபூசுதல். என்புமாலையும் தலைமாலையும் அணிதல் முதலியகோலங்களையும் 'உருத்திரன்' என்னும் பெயரையும் உடையவனாகவும் கூறுதல் ஆன்றோர் வழக்காயிற்று.

மாணுக்கன்: ஆய்வு நெறியில் இவையெல்லாம் பொருந்து வனவாயினும், படைத்தலும் காத்தலும் ஆகிய அருள் தொழிலைச் செய்வோர் முதல்வராகாது, அழித்தலாகிய கொடுந்தொழிலைச் செய்வோன் முதற்கடவுளாதல் என்னையோ ?

ஆசிரியர்: இறைவன் செய்யும் தொழில்கள் யாவும் அருள் தொழிலே யன்றி, அவற்றுள் ஒன்றேனும் கொடுந்தொழிலாதல் இல்லை என்பதை, அத்தொழில்களைப் பற்றி விளக்குமிடத்துக்

கூறுவோம். அதுநிற்க, அழித்தல் தொழில் கொடுந் தொழிலாயின், அதுமுதற்கடவுளின் தொழிலன்றுதல் வேண்டும்' அவ்வாருயின், 'அஃது அவன் விருப்பத்திற்கு மாருய் நிகழ்வ தாகும். ஆயின், அதனைச் செய்வோன் கடவுள் ஆணையினுட் படாதவேருெருமுதல்வனுவன். அவ்வாறு எவரும்எங்கும்கூறினர் இல்லை. கூறினும், சிறிதும் பொருத்தம் அற்றதாய் ஒழியும்.

ஒன்றும் அறியா மாக்கட்கும், உலகத்தினது இழிவையும் துன்பப் பெருக்கையும் உணராதவர்கட்கும் சங்காரத்தொழில் கொடியதுபோலத் தோன்றும். ஆயினும், மெய்யுணர்ந்த பெரியோர்க்கு அஃதுஒன்றே, பேரருள் தொழிலாதல் விளங்கும். 'உருத்திரன்' என்பது, 'துக்கத்தை நீக்குவோன்' என்னும் காரணம் பற்றிவந்த பெயர் என அறிஞர் கூறுமாறும் அறிக.

இவற்றை எல்லாம் நோக்காது, சங்காரத் தொழிலை வேருெருவன் தொழில்போல வைத்து, 'அது தாமசத்தொழில்' என்றும் 'அதனைச் செய்யும் உருத்திரன் தாமச குணம் உடையவன், என்றும், அவனது செயலைக் கூறும் புராணங்கள் எல்லாம் கற்போர்க்கும் கேட்போர்க்கும் தாமச குணத்தை உண்டாக்கும், என்றும், 'அவன் இருக்கும் இடம் சுடுகாடு; அதனுல் ஆங்கு அடிவைத்தலும் ஒவ்வாது. என்றும் சிலர் வாய்கூசாது இகழ்ந்து உய்தியில் குற்றத்திற்கு ஆளாவர், ஆயினும், அவர்தாமே தம் கடவுள் கொடியோரை அழித்து நல்லோரைக் காத்ததாகக் கூறி மகிழ்தல், அறிவுடையோர்க்குச் சால நகை விளைப்பதாகும். கொடியோரை அழித்ததல்லது சங்காரக் கடவுள்போல எல்லா ரையும் அழியாமையின், அஃது அழிப்பு ஆகாதெனின், சங்காரக் கடவுளும் தன்னலம்பற்றி வந்த செற்றம் முதலியனபற்றி உயிர் களை அழியாது, அவற்றது கன்மமும், அதுபற்றி வந்த சிறையாகிய உடம்பு முதலியனவுமாகிய கொடியவற்றையே அருள் காரணமாக அழிப்பனுகலின், அஃது அழிப்பு ஆமாறு என்னை என்க. இதனையே, 'கொன்றது வினையைக் கொன்று நின்றஅக் குணம் என்றோரார்' என்றருளினுர். அருணந்தி தேவநாயனுர். அதனுல், எவ்வாற்ருனும், அழித்தற் கடவுளே முதல் கடவுளாதல் அறிக.

மாணுக்கன்: அடிகளது விரிவான விளக்கங்களால், அழித் தற்கடவுளே முதற்கடவுள் என்பதனை அடியேன் ஐயமற உணர் கின்றேன். ஆயினும், சில இடங்களில் அழித்தற் கடவுட்கும் வேருய் நான்காமவனுய் உள்ள ஒருவனே முதற்கடவுள் எனக் கூறப்படுதல் என்னை? என்ற ஓர் ஐயமுடையேன்; அதனைத் தீர்த்தருள்க.

ஆசிரியர்: நன்றே வினவினாய்! "அழித்தற் கடவுளே முதற்கடவுள்" என அழித்தற் றொழிலின் பெருமை பற்றி உணர்ந்த பின்னர், அவனை அவ் வொருதொழிற்கு மட்டும் உரியவனாக நினையாது, முத்தொழிற்கும் முதல்வனாக உணர்தல் வேண்டும். அவ்வாறன்றிச் சிலர் முதல்வன், அழித்தற் றொழில் ஒன்றிற்கே உரியவன் எனக் கூறி ஏனைத் தொழிலை இகழ்வர்; அவர், 'பாசுபதர்' எனப்படுவோர். அவர் கூறுமாறு அழித்தற் றொழில் ஒன்றையே செய்வோன், ஒடுங்கிய உலகத்தை மீளப் படைக்கமாட்டான் ஆகலின், எல்லாவற்றையும் ஒடுக்கும் மகா சங்கார காலத்தில், அவனும் ஏனை இருவரோடு ஒப்ப முதற்கட வுளால் ஒடுக்கப்படுவன். அதுபற்றியே சில இடங்களில், "முதற்கடவுள் மூவரின் வேறு" என்றல் காணப்படும்.

அங்ஙனமாயினும், சங்காரத்தொழில் ஏனையிரண்டினும் மேம் பட்டதாகலானும், அதற்கேற்ப அதனைச்செய்வோனும் புண்ணிய மிகுதியால், முதற்கடவுளது உருவமும், பெயரும் பெற்று நிற்பனாகலானும், அவன் ஏனை இருவரினும் மேம்பாடுடையனே யாவன். இம் மூவர் தொழிலும் இராசதம், சாத்வீகம், தாமசம் என்னும் முக்குணங்களைப் பற்றி நிற்கும் ஆதலின், சங்காரத் தொழில் ஒன்றே செய்பவனை, 'குணருத்திரன்' என்றும், முதல்வனை 'மகாருத்திரன்' என்றும், 'பரமசிவன்' என்றும் கூறுவர். குணருத்திரனை வழிபடுவோர் பரமசிவனை இகழ்தல் இன்றி அவனை உணரும் நிலையை அணுகி நிற்றலின், அவ்வுருத்திரனை ஏனை இருவர்போல வேறுபட வைத்துக்காட்டு தல், பெரும்பான்மையாக வருதல் இல்லை

மாணாக்கன்: சங்கார காரணன் அன்றி ஏனையோர் பதிகள் அல்லர் எனின், அவர் எவ்வகையினர் ?

ஆசிரியர்: 'பதிகள் அல்லர்' எனவே, அவரும், இந்திரன் முதலிய வானவரும் எல்லாம் பசுக்களாகிய உயிர்வகையினரே என்பது சொல்ல வேண்டாவன்றே? இவரெல்லாரும் புண்ணிய மிகுதியால் முதற்கடவுளின் அருள்வழி அவ்வப் பதவியைப் பெற்று, அவ்வத்தொழிலை நிகழ்த்தி, அவ்வவற்றிற் கேற்ற காலம் முடிந்த பின், அப் பதவியினின்றும் நீங்குவர். இதுபற்றியே மெய்யுணர்வுடையோர் இப்பதவிகளை விரும்புதல் இல்லை.

மாணாக்கன்; காரணக் கடவுளர் முதல், பிறர் எல்லாரும் பசுக்களே என்பதற்கு வேறு சான்று யாதேனும் உண்டோ?

ஆசிரியர்: உண்டு; அவரெல்லாரும் உடம்பாகிய கருவியைப் பற்றி நின்று, அவ்வுடம்பின் அளவான சுட்டுணர்வையே உடையராய் இருத்தலே, அவர் உயிர்த் தொகுதியினர் என்பதை விளக்கும். முதற் கடவுள் உடம்பின்றியே எல்லையற்ற வியாபக உணர்வுடையன் என்க.

பரமசிவனுக்கும் திருமேனி சொல்லப்படுகின்றதே எனின், அத்திருமேனியைப் பெற்ற பின்னரே அவனுக்கு உணர்வு உண்டாயிற்று என்பது இல்லை. அஃது இன்றியே இயற்கை உணர்வுடையவனுய், பிறர்பொருட்டுத் தன் இச்சையால் கொண்ட திருமேனியாகும் அது. இப்பெற்றியை, எல்லாக் கடவுளர்க்கும் பிறப்பு இறப்புக்கள் சொல்லப்பட, பரமசிவனுக்கு அவை ஓரிடத்தும் சொல்லப்படாமையும், 'பிறப்பில் பெருமான்' எனப் புகழப் படுதலும் பற்றி உணர்ந்துகொள்க.

மாணுக்கன்: இங்ஙனம் அடிகள் அருளிச் செய்தனயாவும், எங்கும் பெறற்கரிய பேருண்மைகளாகும். ஆயினும் ஒன்று கூறுவேன், இங்குக்கூறிய எல்லாத் தன்மைகளும் உடைய முதற் கடவுள் ஒருவனன்றி, அத்தன்மைகளை முற்றிலும் உடைய முதற் கடவுளர் பலர் உளர் எனக் கொள்வது பொருந்தாதோ?

ஆசிரியர்: இங்குக் கூறிய எல்லா இறைமைக் குணங்களையும் உடைய முதற்கடவுள் ஒருவன் உளனுயின், யாது குறை பற்றி, வேறெருவன் வேண்டப்படுவன்? வேண்டுதற்குக் காரணம் இன்மையின், அது, 'மிகை' என்னும் குற்றமாகும். இரு பொருள் எல்லாத்தன்மையாலும் முற்றிலும் ஒத்திருத்தல் என்பது எங்கும் இல்லாத ஒன்று. அதனல், முதற் கடவுள், ஒருவனுக்கு மேலும் பலர் உளர் எனின், அவருள் சிறிதாயினும் வேறுபாடு உண்டாய், உயர்வு தாழ்வுகள் சொல்ல வேண்டியே வரும். அவ்வாறு ஒரு சிறிதும் வேறுபாடு இல்லை எனின், ஒருவனுக்கு மேல், இரண்டாமவன் இல்லை என்பதே கருத்தாகும். ஆதலின், எவ்வாற்ருனும் முதற்கடவுள் ஒருவனே யன்றி, இரண்டாமவன் இல்லையென்பது கடைப்பிடித்து உணர்க.

மாணுக்கன்: 'முதற்கடவுள் ஒருவனே; பலர் இல்லை' என்பது பற்றியும், அவ்வொருவன் சங்காரகாரணனே, பிறரல்லர் என்பது பற்றியும்' எழுந்த ஐயங்களெல்லாம் நீங்கி, அடியேன் தெளிவு உண்டாகப்பெற்றேன்; வணக்கம்,

(தொடரும்)

தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

(மலர் 23, இதழ் 5, பக்கம் 289 இன் தொடர்ச்சி)

5. பெயரியல்

1. முன்னுரை :-

அல்வழி யிலக்கணத்தைக் கிளவியாக்கத்தும், வேற்றுமை யிலக்கணத்தை அதனையடுத்த மூன்றியல்களிலும் கூறிய ஆசிரியர், இனி அவ்விரு தொடர்மொழிகளுக்கும் உறுப்பாகிய பெயர், வினை, இடை, உரி, ஆகிய நான்கு சொற்களின் இலக்கணத்தை முறையே கூறத்தொடங்கி, அவற்றுள் முதற்கண்ணதாகிய பெயரிலக்கணத்தை இவ்வியலில் கூறத்தொடங்குகின்றார். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

2. நான்கு சொற்களின் போது இலக்கணம் :-

பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு சொற்களும் பொருள் குறித்தே வரும் (1) அச்சொற்கள் தம்மையும் உணர்த்தும், பொருளையும் உணர்த்தும், (2) அச்சொற்கள் பொருள் உணர்த்துங்கால் வெளிப்படையாகவும் உணர்த்தும், குறிப்பாகவும் உணர்த்தும் (3) இவ்விலக்கணங்களை உடைய சொற்கள் நான்கு வகைப்படும். அவை பெயர், வினை, இடை, உரி என்பன (4, 5.)

3. பெயர்ச்சொல்லின் வகையும், அது பாலுணர்த்துமாறும்:-

உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் எனப் பெயர் மூன்று வகைப்படும் (6). 'னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்' என வினைச்சொல்லின் ஈறுகள் இன்னின்னவை இன்னபாலுணர்த்தும் என வரையறுத்தாற்போல, பெயர்ச் சொற்களின் ஈறுகளைக்கொண்டு இன்னின்னவை இன்ன பாலுணர்த்தும் என வரையறுத்து உணர்த்தற்கியலாது (7).

(அ) உயர்திணைப் பெயர்கள் :-

அவன், இவன், உவன் என்ற ஆண்பாற் பெயர்களும், அவள், இவள், உவள் என்ற பெண்பாற் பெயர்களும், அவர், இவர், உவர் என்ற பலர்பாற் பெயர்களும், யான், யாம், நாம் யாவன், யாவள், யாவர் என வரும் பெயர்களும், உயர்திணையில் இன்னபால் என விளங்க நிற்பனவாம். இவை வழக்கின்கண் பயின்று வருதலான் முன்னர்க் கூறப்பட்டன (8).

ஆண்மகன், பெண்மகள், பெண்டாட்டி, நம்பி, நங்கை, மகன், மகள், ஆடூஉ, மகடூஉ, மாந்தர், மக்கள், அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன், அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான், அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி, பொன்னன், னுன், பொன்னன்னுள் என்ற பெயர்களும் உயர்திணையில் இன்ன பால் என விளங்க நிற்பனவாம். இவை முற்கூறப்பட்டனபோல் வழக்கில் பயின்று வாராமையின் அடுத்துக் கூறப்பட்டன (9).

எல்லாரும், எல்லீரும், பெண்மகன் என்ற மூன்றும் மேற் கூறப்பட்டனபோல பாலறிவந்த உயர்திணைப் பெயர்களாகும். இம்மூன்றனுள் முன்னைய இரண்டும் எல்லாரும், எல்லீரும் என உம்மையடுத்து வருதலானும், பின்னையது பெண்மகள் என்னும் பொருளுடைய பெண்பாற்சொல் 'பெண்மகன்' எனத் திரிந்து வருதலானும் இவற்றை வேறு கூறினர் (10).

அருவாளன், சோழியன் போன்ற நிறப்பெயரும்; மலையமான், சேரமான் போன்ற குடிப்பெயரும்; அவையத்தார், [1]அத்திகோசத்தார் போன்ற குழுவின் பெயரும்; வருவார், செல்வார் போன்ற வினைப்பெயரும்; [2]அம்பர்கிழான், பேரூர்கிழான்போன்ற உடைமைப்பெயரும்; கரியான், செய்யான் போன்ற பண்புகொள் பெயரும்; தந்தையர், தாயர் போன்ற பல்லோர் குறித்த முறை நிலைப்பெயரும்; பெருங்காலர், பெருந்தோளர் போன்ற பல்லோர் குறித்த சினை நிலைப் பெயரும்; பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர் போன்ற பல்லோர் குறித்த திணை நிலைப் பெயரும், [3]பட்டிபுத்திரர், கங்கைமாத்திரர் போன்ற கூடி வருவழக்கின்

---

[1] யானைமேலேற்றும் அளவான நிதியினை உடையார்.

[2] அம்பர், பேரூர் என்பன ஊரின் பெயர்கள், அவ்வவ் ஊர்கட்கு உரியராதல்பற்றி இங்ஙனம் கூறப்பட்டது.

[3] இளஞ்சிறுர்கள் பலர் தம்மில் கூடி விளையாடுகின்ற பொழுது தமக்குத்தாமே வைத்துக்கொள்ளுகின்ற பெயர்கள்.

ஆடியற் பெயரும்; ஒருவர், இருவர், முப்பத்துமூவர் என்னும் எண்ணியற் பெயர்களும் உயர்திணைப் பெயர்களாம். இப் பெயர்கள் அனைத்தும் காரணம்பற்றி வருதலின் முன்னையவற்றி னின்றும் வேறுபடுத்தி இறுதியில் வைத்தார் (11).

புறனடை: மேற்சொல்லப்பட்டனவேயன்றி ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார் என்பன போன்று வரும் பெயர்களும் உயர்திணைப் பெயர் களாகும் (12).

(ஆ) அஃறிணைப் பெயர்கள் :-

அது, இது, உது என வரும் பெயர்களும்; அஃது, இஃது, உஃது என வரும் பெயர்களும்; அவை, இவை, உவை என வரும் பெயர்களும்; அவ், இவ், உவ் எனவரும் பெயர்களும், யாது, யா, யாவை என வரும் வினாவின் பெயர்களும் அஃறிணை யில் இன்னபால் என விளங்க நிற்பனவாம். இவை வழக்கின் கண் பயின்று வருதலான் முற்கூறப்பட்டன (13).

பல்ல, பல, சில என்னும் பெயர்களும்; உள்ளன, இல்ல என்னும் பெய்ர்களும்; வருவது, செல்வது போன்ற வினைப் பெயர்களும்; கரியது, செய்யது போன்ற பண்புகொள் பெயர் களும்; ஒன்று, பத்து, நூறு போன்ற இனத்தெனக்கிளக்கும் எண்ணுக்குறிப் பெயர்களும்; பொன்னன்னது, பொன்னன் னவை என்பனபோன்ற ஒப்பினாகிய பெயர்களும் அஃறிணையில் இன்னபால் என விளங்க நிற்பனவாம். இவை மேற்கூறப் பட்டனபோல வழக்கின்கண் பயின்றுவாராமையின் அடுத்துக் கூறப்பட்டன (14).

ஆ, நாய் போன்ற பெயர்கள் ஆக்கள், நாய்கள் என 'கள்' விகுதி பெற்றவழி இவை பன்மையென நன்கு விளங்கும். இவையே 'கள்' விகுதி பெருது ஆ, நாய் எனவரின் அவை ஒருமை, பன்மை ஆகிய இருபாற்கும் உரியதாகலின் அவற்றைப் பின் வரும் வினைகளைக்கொண்டே நன்கு அறியலாம். (எ - டு) 'ஆவந்தது' என்புழி வந்தது என்னும் வினையால் ஆ என்பது ஒருமையென அறியலாம். 'ஆவந்தன' என்புழி வந்தன, என்னும் பன்மையால் ஆவும் பன்மையென அறியலாம். இங்ஙனம் 'கள்' விகுதி பெருத பெயர்களையே "பால்பகா அஃறிணைப்பெயர்" என்பர் நன்னூலார்.

" பால்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய "
(பெய. 24)

என அவர் கூறுமாறும் காண்க. (15, 17)

புறனடை: மேற்கூறிய அஃறிணைப் பெயர்களேயன்றி பிறிது, பிற; மற்றையது, மற்றையன; பல்லவை, சில்லவை; உள்ளது, இல்லது; உள்ளன, இல்லன என்பன போல்வனவும் அஃறிணைப்பெயர்களே யாகும் (16).

(இ) விரவுப் பெயர்கள் :-

'சாத்தன் வந்தான்' என்றவழி உயர்திணைப் பெயராயும், 'சாத்தன் வந்தது' என்ற வழி அஃறிணைப் பெயராயும் வருதலின் சாத்தன் என்பது விரவுப் பெயராம். இத்தகைய பெயர்களை, வினைகளைக்கொண்டு திணை அறிய இயலுமேயன்றி வினையில் வழி அவற்றை இன்ன திணையென அறிய இயலாதாம் (18)

நிகழ்காலம்பற்றி வருவதும், பல்லோர் படர்க்கையொழிந்த நான்கு பால்களில் வருவதுமான செய்யுமென்னும் முற்றுச் சொல்லைக்கொண்டு அவ்விரவுப் பெயர்கள் உயர்திணை ஒருமைப் பாற்குரியதென்பதை அறியலாம். 'பலர்வரை கிளவி' யென்பது பலர்பாலை யுணர்த்தாத சொல் என்று பொருள்படும். இது செய்யுமென்னும் முற்றும் (19). நன்னூலாரும்,

" பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே " (வினை. 29)

என, இதனை நன்கு விளக்குமாறு காண்க.

விரவுப் பெயர்களின் பாகுபாடு: இயற்பெயர், சினைப் பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர் ஆகியனவும் தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்பனவும் விரவுப் பெயர்களாம் (20). இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர் ஆகிய மூன்றும் நந்நான்கு வகையாகவும், முறைப்பெயர் இரண்டு வகையாகவும் பிரித்துக் கூறப்படும். ஏனைய ஐந்து பெயர்களும் தனித்தனி எடுத்து இலக்கணம் கூறப்படும் (21). இதனையே,

" முதற்பெயர் நான்குஞ், சினைப்பெயர் நான்குஞ்,
சினைமுதற் பெயரொரு நான்கு, முறை யிரண்டும்,
தன்மை நான்கு, முன்னிலை யைந்தும்,
எல்லாம், தாந்தான், இன்னன பொதுப்பெயர் " (பெய. 25)

என நன்னூலாரும் கூறுமாறு காண்க. (தொடரும்)

அவனன்றி ஓர் அணுவும் அசையாது

திரு. வேல். சிவசுப்பிரமணியன் எம். ஏ. (தமிழ்)
எம். ஏ., (மொழியியல்)

அண்மைக்காலம் வரை மெய்ஞ்ஞானி, அஞ்ஞானி, என்ற இருசொற்கள் பயின்றுவந்தன. உலக உண்மைகளை உணர்ந்தவனை மெய்ஞ்ஞானி என்றும் அஃதுணராதவனை அஞ்ஞானி என்றும் கருதி வந்தனர். மெய்ஞ்ஞான சிந்தனை விஞ்ஞானம் என்ற புதிய துறையை வளர்த்தது. விஞ்ஞானம் வளர வளர மெய்ஞ்ஞானிகள் " உண்மை " என நம்பிவந்த சில கருத்துக்கள் தகர்க்கப்பட்டன. மெய்ஞ்ஞானி; ஆத்திகன். விஞ்ஞானி- நாத்திகன் என சொல்லளவில் வழங்கலாயின. உலகம் கடவுளின் படைப்பு என்று நம்பினுன் மெய்ஞ்ஞானி சூரியனிலிருந்து தெறித்த நெருப்புக்கோளமே உலகம் என நிலைநாட்டினுன் விஞ்ஞானி. காலப்போக்கில் விஞ்ஞான முன்னேற்றத்தால் மெய்ஞ்ஞானமே பட்டுப்போகுமோ என்றஞ்சிய மெய்ஞ்ஞானிகள் தீவிரம் காட்ட முனைந்தனர். மெய்ஞ்ஞானத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் கடும் போட்டியே இருந்து வந்தது.

விஞ்ஞான சாதனையின் திடுக்கிடும் பலபுதிய கண்டுபிடிப்புக்கள் மக்கள் மன்றத்தில் விஞ்ஞானத்தின் மதிப்பை மேலும் உயர்த்திவிட்டன. 20ஆம் நூற்றுண்டு மக்கள் விஞ்ஞானத்துடன் பின்னிப் பிணைந்திருக்கின்றனர். மெய்ஞ்ஞானம் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்ற எண்ணம் பரவலாக இருந்து வருகிறது. ஆனுல் மகத்தான சாதனைபுரியும் விஞ்ஞானிக்கும் மெய்ஞ்ஞானமே மன நிறைவு தருகின்றது. விஞ்ஞானத்தால் தீர்வு காண இயலாத எவ்வளவோ உண்மைகளுக்கு இன்று மெய்ஞ்ஞானம் புகலிடமாக உள்ளது. இதை உணர்ந்த விஞ்ஞானிகள் விஞ்ஞானத்தின்முடிவுமெய்ஞ்ஞானத்தில்தான் என்றுஉணர்ந்து வருகின்றனர். எடுத்துக்காட்டாக உலகப்படைப்புப்பற்றி விஞ்ஞானத்தாலும் உணர இயலாத மறைபொருள்கள் பல உள்ளன. இந்த இயற்கைச் சக்தியைத்தான் மெய்ஞ்ஞானம் " கடவுள் " என்று குறிப்பிடுகிறது. மனிதசக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இயங்கி வருகிறது என்ற கொள்கைகளில் விஞ்ஞானிக்கும் ஆழ்ந்த நம்பிக்கை ஏற்படுகிறது.

[இக்கட்டுரையில் காணப்படும் கருத்துக்கள் Cressy Morrison "க்ரசி மாரிசன்" என்பவரின் Man does not stand alone "மனிதன் தனித்தியங்க முடியாது" என்னும் புத்தகத்திலும் காணலாம்.]

கீழ்க்காணும் ஏழுகாரணங்கள் விஞ்ஞானிக்கும் கடவுள் நம்பிக்கை ஏற்படக் காரணமாக இருக்கின்றன.

1. உலகம் எவ்வாறு தோன்றியது? சூரியனிலிருந்து சிதறிய ஒரு துண்டம் என்பது சுருக்கமான விடை. ஆனால் உலகம் தோன்றியது தற்செயலான ஒரு செயலா? தன்முனைப் பால், எதிர்பாராத விதமாகத் தோன்றியது அல்ல என்றும், ஓர் உயர்ந்த பொறியியல் வல்லமையினால் ஆக்கப்பட்டு இயங்கி வருகிறது என்றும், உயிர்கள் தோன்றி வாழப்பல சூழ்நிலைகள் துணை புரிகின்றன என்றும் விஞ்ஞானிகளே தெளிவுபடுத்து கின்றனர். ஒரே கல்லில் ஒருவன் ஒரு மாங்காயை வீழ்த்தினான் என்றால், அது எதிர்பாராத செயலாகவும் இருக்கலாம். ஆனால் 100 கல்லில் 100 முறையும் குறி தவறவில்லை யென்றால் அது அவனுடைய ஆற்றலையன்றோ புலப்படுத்துகின்றது. அது போலவே உலகில் உயிர்கள் தோன்றி நிலைத்திருக்கப் பல சூழ் நிலைகள் - ஒன்றுக்கொன்று இன்றியமையாதனவாய் - துணை புரிகின்றபோது உலகத்தோற்றம் தற்செயலானது, எதிர்பாரா தது என்றால் எவ்வாறு நம்ப இயலும்.

உருசியாவும் (Russia) அமெரிக்காவும் தங்களுடைய ஏவுகணைப் பரிசோதனைகளில் பலமுறை தோல்விகண்டே இறுதி யில் வெற்றியடைந்தனர். உலகம் அதன் மையக்கோட்டில் மணிக்கு சுமார் 1000 மைல் வேகத்தில் தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருக்கிறது. இதற்கு ஓய்வுண்டா? தடம் புரண்ட துண்டா? வேகத்தில்தான் குறைவுண்டா? பரிசோதனையாவது நடத்தியதுண்டா? உலகம் தன்னைத்தானே சுற்றும் வேகத்தில் சிறிதுநேரம் ஓய்வெடுத்துக்கொள்ளுகின்றது என்று வைத்துக் கொள்ளுவோம் - ஓய்வுகூட வேண்டாம். வேகம் மணிக்கு 1000 மைலிலிருந்து 100 மைலாகக் குறைகிறது என்றே வைத்துக் கொள்ளுவோம். விளைவு! இரவுநேரமும் பகல் நேரமும் 10 மடங்கு அதிகமாகும். பகல் நேரம் அதிகமானால் சூரியனில் வெப்பம் தாளாது பயிர்கள் செடிகொடிகள் கருகிச் சாம்பலாகி விடும். இரவுநேரம் அதிகமானால் பொருள்கள் உறைந்துவிடும்.

உலகில் உயிர்வாழ சூரியனும் பேருதவி புரிகின்றது. சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை 12000 டிகிரி பாரன்ஹைடு. இந்த வெப்பநிலை அதிகமானாலோ அல்லது குறைந்தாலோ உலகில் உயிர் வாழ்தல் அரிது. எவ்வளவு தூரம் விலகி இருக்க வேண்டுமோ அந்த அளவு விலகி இருக்கின்றது.

உலகின்மேல் ஓடு இன்னும் 10 அடி பருவன் உள்ளதாக இருக்குமானால் உலகில் உயிர்வளி (Oxygen) இராது. உயிர்வளி இன்றி உயினங்கள் உயிர்வாழ்தல் இயலாது.

உலகம் 23 டிக்ரி சாய்வாக இருப்பதும் ஓர் இன்றியமையாக் காரணம் பற்றியேயாகும். சாய்வாக இருப்பதனால்தான் பருவக் காலங்கள் ஏற்படுகின்றன. செங்குத்தாகச் சாய்வின்றி இருக்குமானால் கடலிலிருந்து எழும் நீராவி தெற்கு வடக்காகவே பாயும். உலகின் கிழக்கு மேற்குப் பகுதிகள் பனியாக இருக்கும்.

திங்கள் அதன் தற்போதைய இடத்திலிருந்து 50,000 மைல் விலகி இருக்குமானால் கடலலைகள் அதிகமாகி உலகத்தை நீரில் ஆழ்த்திவிடும். கடலலைகளின் வேகம் உலகத்தை ஒரே நாளில் இருமுறை நீரில் ஆழ்த்தும் தன்மை வாய்ந்ததாக இருக்கும்.

கடல்மட்டம் இன்னும் சில அடி தாழ்ந்து இருக்குமானால் கரியமில வாய்வும், உயிர்வளியும் உரிஞ்சப்பட்டுவிடும். இவ்வளிகளின்றி தாவர வகைகள் தோன்றா.

வளிமண்டலம் (atmosphere) இன்னும் சிலஅடி சுருங்கி இருக்குமானால் நாளும் விண்ணில் எரியும் எரிமீன்கள் மண்ணில் வீழ்ந்து எங்கும் நெருப்பைப் பரப்பும்.

மேற்காணும் உண்மைகளால் கோள்களின் அமைப்பும் இயக்கமும் தற்செயலாக அமைந்தவை அல்ல என்பது தெளிவாகின்றதன்றோ ?

2. உயிர் என்றால் என்ன என்று எந்த மனிதனாலும் உணரக்கூடவில்லை. உயிரின் துவக்கம் எது, முடிவு எது என்று எவராலும் எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை. ஏனெனில் உயிருக்கு உருவமில்லை, பருமனில்லை, பளுவில்லை. ஆனால் உயிரின் ஆற்றலை மட்டும் காணமுடிகின்றது. ஒரு சிறிய கொடியின் வேர், வலிய கற்பாறையையே பிளக்கிறது என்றால் உயிரின் ஆற்றலை என்னென்பது.

கல்லைச் சிற்பமாக வடிக்கின்றான் சிற்பி. பலவகை நிறங்களின் வண்ணக் கலவையே ஓவியமாக உருவாகிறது அது போல உயிர் என்ற கலைஞனும் இலைகளுக்கு வடிவமும் வண்ணமும் மலர்களுக்கு மணமும் நிறமும் கொடுக்கின்றான். புள்ளினங்களுக்குப் பாட்டுக் கற்றுக்கொடுக்கும் பாணனும் அவ்வுயிரே. கனிகளுக்குச் சுவையூட்டுவதும் மலர்களுக்கு மணமூட்டுவதும் அவ்வுயிரே. சுருங்கச் சொன்னால் வாழும் பொருள்களுக்கு வடிவம் கொடுப்பது உயிர் ஒன்றுதான்.

உயிர் என்பது என்ன என்று உணர இயலாதபோதும் அவ்வுயிரின் ஆற்றலைத் தாங்கி இயங்கும் சில அணுக்களை நம்மால் காண இயலுகிறது. கண்ணிற்குப் புலப்படாத இவ்வுயிரணுக்களின் ஆற்றல் வியக்கதக்கதாக உள்ளது. இவ் அணுக்களை உயிரின் கருஎன்று கூறலாம். உயிர்ப்பொருளை இயக்கி வருவன இவ்வணுக்களே. விலங்கானாலும், மனிதனானாலும் இவ்வுயிரணுக்கள் இன்றி உயிர்வாழ்தல் இயலாது. இவ்வுயிரணுக்கள் தங்கள் வலிமையை இழந்துவிடும்போதுதான் இறப்பு நேர்கின்றது. வியத்தகு ஆற்றலுள்ள இவ்வுயிரணுக்களின் படைப்பின் துவக்கம், விஞ்ஞானியால் விடைகாண இயலாதவற்றுள் ஒன்று. சர்வ வல்லமையுள்ள ஒரு சக்தியாலன்றோ இது படைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. பறவை விலங்கினங்களுக்குள்ள இயற்கையறிவைக் காணும்போது சில நேரங்களில் மனிதனுடைய பகுத்தறிவைக் கூட ஐயப்படவேண்டியுள்ளது. அவைகளுக்கு இந்த இயற்கை அறிவைக் கொடுத்தது யார்? சில கடல்வாழ் உயிர்கள் ஆண்டுக் கணக்கில் கடலில் வாழ்ந்திருந்து இறுதிக்காலத்தில் மீண்டும் ஆற்றில் - தான் பிறந்த இடத்திற்கே வந்து சேர்கின்றன. பிறப்பும் இறப்பும் ஓர் இடம், பிழைப்பு பிறிதோரிடம். என்ன விந்தை !

தமிழ்நாட்டிலுள்ள "வேடந்தாங்கல்" என்னும் ஊரைப் பற்றி எல்லோரும் அறிவோம். கோடைக்காலத்தில் செல்பவர்கள் கொடைக்கானல், குற்றாலம், உதகை செல்வதுபோல், பறவைகளும் பருவநிலைகளுக்கு ஏற்ப உல்லாசந் தேடி வருகின்றன. அங்கு வந்ததும், இனவேறுபாடு கருதாமல் கூடி வாழும் வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றன. அவைகளுக்குள் மொழிச்சண்டை உண்டா? இனச்சண்டைதான் உண்டா?

(தொடரும்)

ஸஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 23, இதழ் 5. பக்கம் 296 இன் தொடர்ச்சி)

प्रधाने शिववह्निस्यात्प्रागादीशान्तकं ततः ।
पूर्वेत्वाहवनीयस्स्या दग्नौ वृद्धाग्निरुच्यते ॥ 327

दक्षिणे दक्षिणाग्निस्स्यान्नैरृत्यां यौवनानलः ।
पश्चिमे गार्हपत्याग्नि र्बालाग्निर्वायुदेशके ॥ 328

उत्तरे केवलाग्निस्स्यात् सामान्यस्त्वीश कोणके ।
इति नाम्ना नामकृत्वा तत्तत् ध्यानं समाचरेत् ॥ 329

ப்ரதானத்தில் சிவாக்னியாகும் (ப்ரதாஞக்னியானது. பஞ்ச குண்ட பக்ஷயாகமாயின் ஈசானத்திலும், நவகுண்டபக்ஷ யாக மாயின், ஈசானத்திற்கும் கிழக்கிற்கும் நடுவில் உள்ள குண்டத் தில் இருக்கும்) கிழக்கில் ஆஹவனீயாக்னி, தென்கிழக்கில் வ்ருத்தாக்னி, தெற்கில் தக்ஷிஞக்னி, தென்மேற்கில் யெளவ ஞக்னி, மேற்கில் கார்ஹபத்யாக்னி, வடமேற்கில் பாலாக்னி. வடக்கில் கேவலாக்னி, வடகிழக்கில் சாமான்யாக்னி என்று இவ்வாறு அக்னிக்கு நாமகரணம் சூட்டி, அதன் வடிவத்தைத் தியானம் செய்யவேண்டும்.

पञ्चवक्त्रयुतं रक्तं सप्तजिह्वा विराजितम् ।
दशहस्तं त्रिणेत्रं च सर्वाभरणभूषितम् ॥ 330

रक्तवस्त्र परीधानं पङ्कजोपरि संस्थितम् ।
बद्धपद्मासनासीनं मेखलात्रयपादकम् ॥ 331

शूलं वज्रं च खड्गं च सृणि शक्ति च दक्षिणे ।
गदा दण्डौ च पाशं च पद्मं चक्रं च वामके ॥ 332

ऊर्ध्व वक्त्रे त्रिजिह्वा च शेषाः प्रागादितः क्रमात् ।
स्वाहा देवी स्वधा पत्नी दक्षिणेवामके तथा ॥ 333

शैवाग्नि ध्यानमुद्दिष्टं शिवकुण्डे प्रकीर्तितः ।

ஐந்துமுகம், சிவந்தவர்ணம், ஏழுநாக்கு, பத்துக்கைகள். மூன்று கண்கள், இவற்றையுடையவர் நிறைந்த ஆபரணம், சிவப்பான வஸ்திரம் தரித்திருப்பவர். தாமரைப்பூவின்மேல் வீற்றிருப்பவர், பத்மாஸனம் போட்டு உட்கார்ந்திருப்பவர். குண்டத்திலிருக்கும் மூன்று மேகலைகளையே மூன்றுபாதமாகக் கொண்டவர். வலது புஜங்களில் சூலம், வஜ்ராயுதம், கத்தி, அங்குசம், சக்தி இவைகளையும் இடதுபுஜங்களில் கதை, தண்டம், பாசம், பத்மம் சக்ரம் இவைகளையும் தரித்திருப்பவர், ஊர்த்வமுகத்தில் மூன்று நாக்கும் மற்ற நான்குமுகங்களில் நான்கு நாக்குமாக ஏழு நாக்குகளை யுடையவர். ஸ்வாஹாசக்தி, ஸ்வதாசக்தி என்ற இரண்டு சக்திகளுடன் கூடியவர். இவ்வாறு சிவாக்னியின் வடிவத்தைத் தியானிக்கவேண்டும்.

ஆஹவனீயாக்னி

एकवक्त्रं त्रिणेत्रं च त्रिमेखलात्रिपादकम् ॥ 334

अक्षमालात्रिशूलं च स्रुवं च दक्षिणे करे ।
अङ्कुशं डमरुं चैव स्रुवं च वामहस्तके ॥ 335

रक्तवर्णं सुखासीनं पीतवस्त्रेण वेष्टितम् ।
ध्यायेदाहवनीयाग्निं पूर्वस्यात् कुण्डमध्यमे ॥ 336

ஆஹவனீயம் என்ற அக்னி கிழக்கில் உள்ள குண்டத்தில் பூஜிக்கப்படுவார், பூஜைக்கு முக்கியம் பூஜ்யரின் வடிவத்தை அறிவது, ஆதலால் ஆஹவனீயம் என்ற அக்னியின் வடிவமானது இங்குக் கூறப்படுகிறது. ஒருமுகம், மூன்று கண்கள் இவற்றையும் மூன்று மேகலைகளை மூன்று பாதமாகவுடையவர். மற்றும், அக்ஷமாலை, திருசூலம், ஸ்ருவம் இவைகளை வலது கைகளிலும் அங்குசம், உடுக்கை, ஸ்ருவம் என்ற இவைகளை இடது கைகளிலும் தரித்துக்கொண்டிருப்பவர். சிவந்த திருமேனியை உடையவர். பொன்மயமான ஆடை அணிந்தவர், இத்தகைய ஆஹவனியாக்னியை, புருஷவடிவமாயும், நின்ற திருக்கோலத்துடன்

கூடியதாயும் விளங்கும் சதுரச்ரகுண்டத்தில் தியானிக்க வேண்டும், சதுரச்ரம் என்ற குண்டமே எல்லாக் குண்டங்களுக்கும் உத்பத்திஸ்தானமாகும். பொதுவாகக் குண்டங்கள், புருஷகுண்டம், ஸ்திரீகுண்டம், அலி குண்டம் என்று மூன்று பிரிவை உடையது. புருஷகுண்டங்கள் நின்ற வடிவமாகவும் ஸ்திரீகுண்டம் உட்கார்ந்த வடிவமாகவும் அலிகுண்டம். சயன வடிவமுடையதாகவும் இருக்கும்.

விருத்தாக்னி

चतुर्भुजं त्रिणेत्रंच एकवक्त्रं जटाधरम् ।
त्रिशूलं परशुं चैव अभयं वरदान्वितम् ॥ 337

श्वेताभं वृषभारूढं वृद्धाग्निं पावके यजेत् ।

தென்கிழக்கில் பெண்வடிவமாய், உட்கார்ந்த திருக்கோலத்துடன் விளங்கும் யோனி குண்டத்தில் விருத்தாக்னியைத் தியானிக்கவேண்டும். அந்த விருத்தாக்னியானது, நான்கு கைகளை உடையது, மூன்று கண்களுடன் ஒரு முகமுடையது, ஜடாதாரியாய் திருசூலம், கோடாரி, அபயம், வரதம் என்ற இவைகளுடன் கூடியது, வெண்மையான காந்தியுடன் விருஷபத்தின்மீது ஆரோஹணித்து நிற்கும் வடிவமுடையது.

தக்ஷிணாக்னி

द्विमुखं स्वर्णवर्णाभं त्रिपादं सप्तहस्तकम् ॥ 338

हिरण्यादि चतस्त्रं च जिह्वा दक्षिण वक्त्रके ।
सुप्रभादि त्रयोजिह्वा वामवक्त्रेतु संस्थितः ॥ 339

शक्तिरग्निं स्रुवं चैव स्रुक् स्रुवे धृतपात्रकम् ।
तोमरं परशुं वामेत्वजवाहन संयुतम् ॥ 340

दक्षिणाग्निमितिध्यात्वा न्यसेद्दक्षिणकुण्डके ।

தென்திசையில் விளங்குவதாயும் அலியாய் சயனவடிவமாயும் இருக்கும். அர்த்தசந்திர குண்டத்தில், தக்ஷிணாக்னியைத் தியானிக்கவேண்டும். அதாவது இரண்டு முகத்துடன் கூடியது.

தருமையாதீனம் ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜஸ்வாமி ஆலய
அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் :

கும்பாபிஷேக முடிவில் இவ்வாலய பரம்பரைக் கருத்தா ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் பட்டு பரிவட்ட பிரசாதம் பெறுதல்.

தருமையாதீனம் ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜஸ்வாமி ஆலய
அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்:

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் இசையரசு திரு.
M. M. தண்டபாணி தேசிகர், ஆச்சாள்புரம் பெருநிலக்கிழார் திரு.
வை, கோவிந்தராசுப் பிள்ளை இருவருக்கும் பிரசாதம் அளித்து ஆசி அருளியது

சுவர்ணமான காந்தியை உடையது. மூன்று கண்களுடனும் மூன்று கால்களுடனும் ஏழுகைகளுடனும் கூடியது. ஹிரண்யை, கனகை, ரத்தை, கிருஷ்ணை என்ற பெயருடைய நாக்குகள் வலது முகத்திலும் சுப்ரபை, அதிரக்தை, பகுரூபை என்ற மூன்று நாக்குகள் இடது முகத்திலுமாக ஏழு நாக்குகளை உடையது, ஏழு கைகளிலும், சக்தியாயுதம், அக்னி. ஸ்ருவம், ஸ்ருக், நெய் பாத்திரம், தோமரம், பரசு, என்ற ஏழுஆயுதங்களுடன்கூடியவர். இவ்வாறு தக்ஷிணாக்னியைத் தியானிக்கவேண்டும்.

யௌவனாக்னி

त्रिणेत्रं पञ्चवदनं रक्तांगं दशहस्तकम् ॥ 341

शूलं परशु खड्गं च ह्यभयं वज्रदक्षिणे ।
टङ्कपाशाब्ज चक्राणि वरदंचैव वामके ॥ 342

हिरण्या कनकेसव्ये ईशेद्वे शेषमेककम् ।
यौवनाग्नि वृषारूढं नैरृत्यां विन्यसेत्बुधः ॥ 343

தென்மேற்கில் அனங்கின் வடிவமாய் ஆசீனமாய் விளங்கும் முக்கோண குண்டத்தில் யௌவனாக்னி என்ற அக்னி தியானிக்க வேண்டியது. எவ்வாறெனில் மும்மூன்று கண்களுடன் ஐந்து திருமுகங்கள். சிவப்பான அங்கம், சூலம், பரசு, கத்தி, அபயம், வஜ்ராயுதம், டங்கம், பாசம், தாமரைப்பூ, சக்ரம், வரம் என்பவை களைத் தாங்கிய பத்துக்கைகளுடன் கூடியவர், ஹிரண்யை, கனகை என்ற இரண்டு நாக்குகள் வலது திருமுகத்திலும், ரத்தை, கிருஷ்ணை என்ற இரண்டு நாக்குகள் இடது முகத்திலும், மற்றய மூன்று முகங்களிலும் சுப்ரபை, அதிரக்தை, பகுரூபை என்ற மூன்று நாக்குகளையும் உடையவர் விருஷபவாஹனர். என்று தியானித்துப் பூஜைசெய்யவேண்டும்.

[தொடரும்]

'யாம் இரப்பவை'

புலவர். திரு. ஆ. மாணிக்கவாசகன்.

தமிழ்கூறு நல்லுலகத்தில் மக்கள் நாகரிகமெய்திய காலந் தொட்டே கடவுட் கொள்கையாம் சமயநெறி போற்றப்பட்டு வந்துள்ளது. இதன் மெய்ம்மையைப் பழந்தமிழ் நூல்களாகிய தொல்காப்பியமும் பரிபாடலும் தெற்றன விளக்குகின்றன. மனித உயிர்க்கொள்கையாக அமைவன அறிவு விழைவு செயலென்னும் மூன்றுமாம். அறிவால் பொருளீட்டலும் விழைவால் இன்பம் நுகர்தலும் செயலால் அறஞ்செய்தலுமே அவற்றின் கடமைகளாகும். இம்மூன்றிலும் செம்மை பெற்றுலே செம்பொருளாம் இறைவனையடையும் வீட்டு வாயிலைக் காணுதலியலும்.

சங்ககாலத் தண்டமிழ்ப் புலவர்கள் இறைவனைப் பாரொடு விண்ணகப் பரந்து நிற்பவன் எனக்கருதினார்கள். அவனை இயற்கைப் பொருளிலே கண்டுகண்டு வந்து உள்ளங்குளிரக் கண்ணுங் குளிர்ந்தார்கள், நிலவுலகில் முதல் நிலமாகத் தோன்றியது மலைப்பாங்கான குறிஞ்சியே யென்றும் அந்நில வாழ் மக்கள் இயற்கை யழகிலே தம் நெஞ்சந்தோய்ந்து அவ்வழகிற்கு 'முருகன்' எனப் பெரும் பெயரிட்டு அக்கடவுளை வழிபட்டார்களென்றும் தமிழ் நலங்கனிந்தோர் கூறுகின்றனர்.

"சேயோன் மேய மைவரை உலகம்"

என்று குறிஞ்சிக் கடவுளைக் காப்பியர் கூறுதலுங்காண்க!

நீலக் கடல்விளிம்பில் காலைக்கதிரவன் தோன்றிப் பொன் வண்ணச் சுடர்வீசிப் புறவுலகை இன்பவண்ணமாக்கி ஆருயிர்களுக்கு ஆக்கஞ் சொரிகின்றான். இக்காட்சியைக் கண்டுவக்கும் நக்கீரர் உள்ளத்திலே ஞானவொளி கூத்தாடுகின்றது! அருளாற்றுப் படுத்தும் பண்புடையவரன்றோ அவர். எனவே, அகவுலகை அறிவொளியால் இன்பமாக்கும் செவ்வேளின் சேவடி அகக்கண்ணிலே தோன்றுகின்றது. "அகத்தில் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்" அல்லவா! பாடுகிறார் :-

„ உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்—''

என்று. இங்ஙனம் முருகனின் திருவடிக்கு ஞாயிற்றை உவமை செய்ததனுற் போலும் கடவுள் வணக்கத்தில் புதுமை புகுத்திய இளங்கோவடிகளும்,

" ஞாயிறு போற்றுதும்! ஞாயிறுபோற்றுதும்!"

என்றே பாடிமகிழ்ந்தார்

இவ்வாறு உலகிற்கு இயற்கை நலங்கூறும் புலவரே யன்றி அருளாசிரியர்களும் "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணுத" இறைவனைப் பல நிலைகளிலே கூறிச்சென்றுர்கள். அந்நிலைகளிலே ஒருவன் தான் அழகு என்னும் முருகன்! மாற்றமும் மனமும் கடந்து நிற்கும் கடவுளை வழுத்தி யின்புறவும், அவனருளே கண்ணுகத் துணைபுரிதல் வேண்டுமன்ரே! இப்பேருண்மையைப் பேரன்பர் மணிவாசகரும் " அவனருளாலே அவன்ருள் வணங்கி -" என்று அருளிச்செய்தார், இன்னும் அவனருளைப் பெறுதற்கு மனிதனுற்றவேண்டிய அருமுயற்சிகள் பலவாம். இயற்கையாக மனதிலே பற்றிப் படரும் ' மோனக் கொடி'யினை ஆணவமாசினை அறிவாற் கழுவித் தூய்மை செய்தல் வேண்டும்! அப்பொழுதே நெஞ்சம் நெகிழும்; அன்பு அரும்பும்; அருள் தழைக்கும்! அவ்வருளே பரம்பொருளைக் காணும் ஆர்வத்தைத் தோற்றுவிக்கும். திருமூலர் என்னும் ஞானவாசிரியரும்.

" ஆர்வ முடையவர் காண்பர் அரன்தன்னை
ஈர முடையவர் காண்பர் எந்தையிணையடி"

என அறிவுறுத்திச் சென்றதையும் இங்குச் சிந்தித்தல் நன்ரும்!

இனி, இறைவனது திருவடி நீழலை யடைந்து இன்புறத் தக்கவர்கள் யாவர் என்பதை யறிதல் வேண்டும்.

மன்னுயிரனைத்தையும் இன்னுயிராகக் கருதும் அருள்தக வுடையவரும் அவ்வருளால் அறவினை ஆற்றிக்கொண்டவரும் நிலையுடைய உயர்ந்த குணங்களை யுடையவரும் பெருந்தவத்தினைச் செய்தவரும் எஞ்ஞான்றும் இடையருது இறைவனை

வழிபட்டவருமாகிய இன்ன பெற்றியாரே தக்கவராவர் என்று முருகக்கடவுளை வழிபடும் பரிபாடலாசிரியர் இளவெயினனர் என்பார் கூறுவர், அப்பாவடிகள் சில:

"புகழ் வரம் பிகந்தோய்!
நின்குணம் எதிர்கொண்டோர் அறங்கொண்டோர் -
மன்குணம் உடையோர் மாதவர் வணங்கியோர்
நின்னிழல் இன்னோர் சேர்வார்............"

என்பனவாம்.

இந்நெறி கூறிய இப்புலவர்பெருமானே உலக நிலையாமைப் பொருள்களையுணர்த்தும் உயிர்களை இன்பப்பேற்றிற்கு ஆளாக்க விழைந்தும் குழகனும் குமரனிடம் முறையிட்டுச் சில சொல்லு கின்ருர். அப்பாட்டின் பொருள்:

யாங்கள் உன்னிடத்து இரந்து பெறக் கருதுபவை, அநுப விக்கப்படும் பொருள்களும், அவற்றைப் பெறுதற்குரிய பொன் னும், அவற்ருல்பெறும் இன்பமும் அல்ல; வட்டவடிவாகவுள்ள பூங்கொத்துக்களைக்கொண்ட கடம்பினது தழைத்த மாலையினை யணிந்த முருகப்பெருமானே! வீடு பேற்றினைத் தருதற்குரிய நின்னருளும், அதனை யாங்கள் அடைதற்குக் காரணமாகின்ற நின் திருவடிக்கண்ணே செலுத்தும் மெய்யன்பும், நன்மையைத் தரும் அறநெறியுமாகிய இம்மூன்றுமேயாகும் என்பதே. பாவடிகள் :-

" ... ... யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே!"

என்பனவாம்.

இவ்வரிய கொள்கையினைப் பண்டே தமிழுலகில் விதைத்த அப்பெருந்தகையின் உயர்நெஞ்சினை எவ்வாறு வழுத்த வல்லேம்? இவ்வித்தன்றே இன்று பக்தி நூல்களெல்லாம் - "இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்ருர்; பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும் மறவாமை வேண்டும்" - எனப் பாடித் தழைக்க ஏது வாயிற்று! பொருளும் பொன்னும் போகமும் எல்லாம் மின்னைப் போல் தோன்றித் தோன்றி மறைந்தொழிவதனுற்போலும் அம்மதியுடைப்புலவர் அவற்றை விரும்பாதொழிந்தார். மக்கள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலையே விழைந்த அவர் அதற்குரிய அருளையும் அன்பையும் அறத்தையுமே வேண்டி நின்றார்! இம் முப்பொருளுமே என்றும் நிலைத்து உலகினைக்காக்க வல்லனவாம். இவற்றை வேண்டுவோரே 'பண்புடையார்' எனப் போற்றப்படுவர். வான்மறை வகுத்த வள்ளுவரும். "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்". என அருளியதும் ஈண்டு நினைவில் நிறுத்தற்குரியது!

இதுகாறும் விளக்கிய சில கருத்துக்களால் பழந்தமிழ் மக்கள் இறைவனை இயல்பாகவே வழிபட்டுவந்தனரென்பதும் இறைவனிடத்தே, கேவலம் அழிவுப்பொருள்களை வேண்டாது இறவா இன்பப் பேற்றிற்கு வாயிலாம் திருவடியன்பையே வேண்டி நின்றார்களென்பதும் நன்கு உணரலாம்.

மறக்க முடியவில்லை

திருமுறை இன்னிசைவாணர், வேலூர். க. சோக்கலிங்கம்.

இராகம் - நாட்டைக்குறிஞ்சி] [தாளம் - ஆதி

பல்லவி

ஒருவாரம் ஒருமாதம் ஒருவருடம் ஆனதே
ஒருகணத்தில் வருவதாய் உரைத்தசொல்லும் போனதே (ஒரு)

அனுபல்லவி

வருவார் இன்றுநாளை என்றுமகிழ்ந் திருந்தேன்
வன்னெஞ்சர் என்றறிந்தென் னெஞ்சம் வருந்துகின்றேன் (ஒரு)

சரணம்

அன்னமே ஆருயிரே என்றுபொன் னம்பலவர்
அழகழகாய்ப் பேசிப் பழகியதும் மறந்தார்
இன்னமும் வந்தாரில்லை இன்பமும் தந்தாரில்லை
எல்லாம் அறிந்தஅவர் என்னை அறிந்தாரில்லை (ஒரு)

விந்தை மொழிகள்பல விதவித மாய்ப்பேசி
விரைவில் வருவதாய்க் கண்வலையும் வீசி
சொந்தமாய் வந்தணைத்துச் சுகம்தந்ததும் மறந்தார்
சொல்லும் செயலும்வேறாய்ச் சோதிக்க மனம்துணிந்தார் (ஒரு)

எண்ணிஎண்ணி எனக்கே கண்ணுறக்கம் இல்லை
இரக்கம் இல்லாதாரை மறக்க முடியவில்லை
தண்ணிலவும் காயுதே தழலாய் இவ்வேளை
தனித்திருந்து வாடுகின்றேன் சற்றும் நினைந்தாரில்லை (ஒரு)

தமிழ் கூறு நல்லுலகம்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

இதோ அழைக்கிறது இலக்கியவாயில்; விரைந்துசெல்வோம் உள்ளே, ஈடு சொல்லமுடியாத பீடுநிறை மாளிகை: கற்றேன்றி மண்தோன்ருக் காலத்தே வாளோடு முற்றேன்றி மூத்தகுடியின் கலங்கரை விளக்கமன்ன சிறப்பினை எடுத்துக்கூறும் விண்பொரு மாடம்; கற்றுத்துறை போகிய கவிவல்லார் நாவண்ணத்தால் மூற்றித்திகழும் கவின் கூடம்!

இலக்கிய மாளிகையில் அடியெடுத்து வைத்தவுடன் உள்ளப் பாறையில் எண்ண அலைகள் மோதுகின்றன. "இப்படி இருந்தது எமது நாடு" என்று கூறுதற்குத் துணை செய்ய "இதோ இருக்கிறது இலக்கிய ஏடு" எனக்காட்டிப் பெருமிதம் கொள்ள முடியாமல், "இருக்கக்கூடும்" என்ற ஊகத்தில் உருவெடுத்து தமிழகத்தை எண்ணிப் பார்க்கிறேம்,

இன்றைக்கு ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே உயர்ந்த எண்ணங்களை இலக்கியமாகப் பதிவு செய்த ஏற்றம் பெற்றது நம் தமிழகம். முதுபெரும் புலவர் கூடி முத்தமிழ் வளர்த்த முச்சங்கங்கள் காலம்பற்றி விரித்துரைக்கிறது இறையனூர் களவியலுரை. அதன் துணைகொண்டு இன்றமிழ்ச்சங்கங்கள் மூன்றும் பத்தாயிரம் ஆண்டுகள் நீடித்திருந்து இயலிசை நாடகம் முழங்கச் செய்தன என்று அறிகிறேம். இலக்கிய ஆதாரம் கிடைத்தற்கியலாப் பழம்பெருங்காலந்தொட்டே தமிழ்நாடு அரசியலிலும் அருங்கலைகளிலும் சிறப்புற்றுவந்திருக்கிறது,

குவலயம் உய்யவந்த குறளிலே ஒருகுறள்;

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று" (குறள். 955)

ஈண்டுப், "பழங்குடி" என்பதற்குப் பரிமேலகழகர், "தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கண் பிறந்தார்" என்று

உரை எழுதுகிறார். பின் "தொன்றுதொட்டுவரல்" என்பதற்கு விளக்கம் கூற முனைந்தார். உவமை காட்டித் தெளிவு படுத்த உன்னிய அவர் நினைவில், படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவரும் தமிழக வேந்தர் சேர சோழ பாண்டியர் தோன்றினர். உடனே, "தொன்றுதொட்டு வருதல் சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம் பட்டு வருதல்" என்ற விளக்கம் உருப்பெற்றது. தமிழகப் பழமைக்குச் சான்று பகர்வதன்றோ இது!

பாண்டியரையும் சோழரையும் பற்றிக்குறிக்கக், கி. மு. நான்காம் நூற்றாண்டிலே ஒரு காத்தியாயனர்; "போர்க் களத்தே புறக்கிடல் அறியார் முடியுடைத் தமிழ்வேந்தர் மூவர்" எனக் கல்வெட்டிலே பொறிக்கக், கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலே ஒரு அசோகர்; சேர நாட்டையும் சிறப்புடைக் காஞ்சியையும் எடுத்துப் பேசக், கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலே ஒரு பதஞ்சலி; இவ்வாறு பலப்பலர்—மொழிபெயர் தேயத்தார் தமிழகம் பற்றி இயம்புதற்குள்ளனர்.

அலை அலையாக எழும் நம் சிந்தனையைக்கலைக்க எங்கிருந்தோ வருகிறது ஒரு குரல். வெண்கல மிடற்றால் நன்கலமென்னப் பாடுகின்றார் யாரோ?

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத், தமிழ் கூறு நல்லுலகத்து"

அதோ பனம்பாரனார் பாடுகின்றார்; அவரே. தொல்காப் பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் யாத்தவர். கூறும் நாவினிக்கச் செய்யும் தமிழ் நாட்டைக் காணுகின்றார் புலவர். "தமிழ் கூறு நல்லுலகம்" என்று வாய்நிறைய அழைக்கின்றார். அருவி இழிந் திடக் கருவிவான் முட்டும் வேங்கடம் வடக்கே; ஒரு நாள். கோட்டுக்குப் பெயராக இருந்து, பின் வருநாள் தொடியோள் பௌவமாகிய குமரி தெற்கே; இடைப்பட்டுக் கிடக்கும் தமிழ கத்தை நமக்குக் காட்டுகிறார்.

பனம்பாரனாருக்குப் பின்வந்த பாவலர் இளங்கோ, வீங்குநீர் அருவி வேங்கடத்தையும், விரிநீர்ப் பௌவம் குமரியையும் பார்க் கின்றார். இடை நிலத்தே தமிழ் வரம்பறுத்துப் பாடுகின்றார்,

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாடு"

[வேனிற்காதை 1-2]

வடக்கே வேங்கடம்; கிடக்கும் குமரி தெற்கே. கிழக்கும் மேற்கும் ஆழுந்திரைக் கடல்-இவ்வெல்லைகட்குட்பட்ட நாடே ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முன் இலக்கியத்தில் நாம் காணும் தமிழகம்.

மொழியின் பெயரால் அம்மொழி வழங்கப்படும் நாட்டை அழைத்தல் இயற்கை; தமிழ் வழங்கிய நிலப்பரப்பும் அவ்வாறே தமிழகம் என்றும் தமிழ் நாடு என்றும் அழைக்கப்பெற்றது. எட்டுத்தொகையுள் ஒன்றாம் குட்டுவர் புகழ் இசைக்கும் பதிற்றுப்பத்தில் இரண்டம் பத்தின் பதிகத்தில் "இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்க" என்ற குறிப்புக் காணப்படுகிறது. பூமன்னர் வீரமும் ஈரமும் புகலும் புறப்பாட்டில் "வையக வரைப்பில் தமிழகம் கேட்ப" என்பது கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனாரின் கூற்று. "இமிழ் கடல் வரைப்பில் தமிழகம்" என்று குறிக்கிறார் இளங்கோ, தமது வளங்கனிந்த சிலம்பில். "சம்புத் தீவினுள் தமிழக மருங்கில்" என்று சாற்றுகின்றார் மேகலை தந்த சாத்தனார்.

பத்துப்பாட்டில், எழுவர் தம் நல்வலங் கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனைப்பற்றி, உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின் மாங்குடி மருதனாரால் பாடப்பெற்றது மதுரைக்காஞ்சி. அதில்

"தென்னவற் பெயரிய துன்னரு துப்பிற்
றொல்முது கடவுள்" (40—41)

என்ற அடிகட்கு, உச்சிமேல் வைத்துக் கற்றோர் கொண்டாடும் நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரை ஈண்டு நோக்கத் தக்கது. "இராவணனைத் தமிழ் நாட்டை ஆளாதபடி போக்கின கிட்டுதற்கரிய வலியினை உடைய பழமை முதிர்ந்த அகத்தியன்" என எழுதிச் செல்கின்றார். பரிபாடல் திரட்டுப் பாடல் "தண்டமிழ் வேலித் தமிழ் நாடு" என்னும் சொற்றொடர்களைக் காண்கின்றோம்.

காவலர் குடியிற் பிறந்த பாவலர் இளங்கோவின் சிலம்பில், தமிழகம் என்றும் தமிழ் நாடு என்றும் குறிப்புக்கள் பல காணப் படுகின்றன. மலையிலே கல்லெடுத்துக் கங்கை அலையிலே நீராட்டக் கருதிய செங்குட்டுவனை நோக்கி,

"இமிழ் கடல் வேலியைத் தமிழ் நாடாக்கிய
இது நீ கருதினையாயின் ஏற்பவர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை"

(காட்சிக்காதை 165—67)

என்று விளம்புகின்றான் வில்லவன் கோதை. தண்டாவளம் பெற்ற தண்டமிழ்க் கூடல், "தென் தமிழ் நாட்டுத் தீதுதீர் மதுரை" எனக்குறிக்கப்பெறுகிறது. "வடவாரியர் படைகடந்து தென் தமிழ்நாடு ஒருங்குகாணப் புறப்பட்டுவிட்டான் செங் குட்டுவன் என்று அறிவிக்கிறார் இளங்கோ. "தென் தமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து இமய நெற் றியில் விளங்கு புலிவில் கயல் பொறித்த நாளைக் "கனக விசய ரோடு நாமும் நினைவுபடுத்திக் கொள்கிறோம்.

இவ்வாறு, "தமிழகம்" என்றும், "தமிழ்நாடு" என்றும் அழைக்கப்பெற்ற தமிழ் வழங்கும் உலகத்தைக் கடிபகை எறிந்து முடியுடை வேந்தர் மூவர் சிறப்பாக ஆண்டனர். வில் லெடுத்து வஞ்சியாண்ட சேரரும், வீரப்புலியெடுத்து கோழி யாண்ட சோழரும், விளங்குகயலெடுத்துக் கூடலாண்ட பாண்டி யரும் இலக்கியம் காட்டும் ஏந்தல்கள். இவர்களை,

"மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசு கெழுதானை மூவர்"

என அழைக்கின்றார் வெள்ளைக்குடிநாகனார். இணையற்ற புறநா னூற்றில். ஓயாது வயிரியர்க்கு வழங்கும் ஓய்மான்நாட்டு நல்லியக் கோடனைச் சிறுபாணாற்றுப் படையால் ஏத்துகிறார் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார். அதனுள்,

"ஒன்னார்,
வடபுல இமயத்து வாங்குவில் பொறித்து
எழுவுறழ் திணிதோள் இயல்தேர்க்குட்டுவன்" (47—49)

என்று சேரர்தம் சிறப்பை நமக்கு நினைவூட்டுகிறார்,

அதோ வீசொளி முத்துக்கள் அலங்கரிக்கும் வெண் கொற்றக்குடை; கண்ணிற்கு நிறைவு தரும் கண்ணி; காற்றும் பிற்படக் கடுகிச் செல்லும் தேர்; இத்தனைச் சிறப்புக்களும் உடையவன் யார் தெரியுமா? கூடலாளும் கோமான் செழியன். சிறுபாணாற்றுப்படை செப்புகிறது.

“ஒன்னார் மண்மாறுகொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்” (63—65)

தினவெடுத்துவரும் முகில் கழுத்தினைத் தேய்க்கும் உயர்ந்த மதிலை அழித்தொழித்த தடக்கையான். ஐயம் ஏற்பட்டு ஆராயப்படாத உலகமறிந்த அரும்புகழ்க் கிடக்கையான். அவனே நற்றேர்ச் செம்பியன்.

“ஒன்னார்,
ஓங்கெயில் கதவம் உருமு சுவல் சொறியும்
தூங்கெயில் எறிந்த தொடி விளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்” 79—81

(சிறுபாணாற்றுப்படை)

மதிப்புரை

சிவானந்தலஹரி

தமிழாக்கம். பாடல்கள் ஸ்ரீ பைரவ பாரதியார்; உரை நடை ஸ்ரீ. H. B. முத்துக்கிருஷ்ணன். வெளியிடுவோர் :- கலா நிலயம், கும்பகோணம். விலை ரூ. 2—00.

ஆதிசங்கரர் ஸ்ரீசைலத்து எழுந்தருளியுள்ள ஸ்ரீ மல்லிகார்ச் சுனப்பெருமானைத் தோத்திரித்த தோத்திரங்களே சிவானந்த லஹரி எனப்படுவது. வடமொழியில் உள்ள இந்நூலைத் தமிழில் பாடல்களாகவும் உரை நடைகளாகவும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். தமிழ் மக்கள் இதனை உணர்ந்து ஓதி இன்புறுவார்களாக.

— வி. சா. குருசாமி தேசிகர்.

(334 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்து வாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணில்ஆ னந்த அருவிநீர் சொரியக்
கைமலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினல் நீடி அறிவரும் பதிகம்
பாடினர் பரவினர் பணிந்தார்,

இது சுந்தரர், திருநடனம் கும்பிட்ட அநுபவம். இவ்வாறு இவ்வநுபவங்களைச் சேக்கிழார் தெளிவுறக் காட்டியுள்ளார். உண்மை விளக்கமும்,

" பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரையுணர்வுக் கெட்டா ஒருவன்—வரைமகள்தான்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு "

என்று, இத்திருக்கூத்து, தன்னைக் கண்டவர்கட்குப் பிறவித் துன்பத்தை நீக்கி முத்திப் பேரின்பத்தை அளிக்குமாற்றை இனிது விளக்குகின்றது. இது பற்றியே தில்லைத் தலம், காண முத்தி தரும் தலமாயிற்று. முதற்கண் காட்டிய திருவெண்பாவில் *அவாயம் (அபாயம்) என்றது பிறவித் துன்பத்தையே யாகும். இறைவன் நடனம் புரிதற்கு இடம் 'ஆன்மா' என்றும், 'அவனுக்குத் திருமேனி பஞ்சாக்கரம்' என்றும் சொல்லப்

* " சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை " என்ற ஔவையார் வாக்கும் சிந்தித்தற்குரியது.

படினும், அவைகளோடு அவனுக்கு உள்ள தொடர்பு, அவனது சத்தி வழியாகவேயாம். ஆகவே, இறைவனுக்கு இடம், திருமேனி முதலிய எல்லாமாவது, அவனது அருளேயாகும். அது பற்றியே இங்குக் காட்டிய திருவெண்பாவில், "பரை இடமா நின்று" என்றும், "கருணை உருக் கொண்டு" என்றும் விளக்கி, இடையே, "பஞ்சாக்கரத்தால்" என்பதனை நினைப்பித்தார், ஆகவே, ஆன்மாவும், பஞ்சாக்கரமும் உபசார அம்பலமும், உபசாரத் திருமேனியும் ஆம் என்பதும், திருவருளே உண்மை அம்பலமும், உண்மைத் திருமேனியும் ஆம் என்பதும் விளங்கும்.

"கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி"

என்றும்,

"அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம்"

என்றும் சேக்கிழார் திருமொழியில், கூத்தப்பிரானது உண்மைத் திருமேனியும், உண்மைத் திருவம்பலமும் அருளிச்செய்யப் பெற்றன. இத்திருக்கூத்து, மேற்கூறியவாறு பஞ்சகிருத்தியத்தை விளக்குதலால் தன்னைத் தரிசித்தவர்களுக்கு, 'ஐந்தொழிற்கும் சிவபிரான் ஒருவனே முதல்வன்' என்னும் சிவஞானத்தைத் தருவதாகும். அதுபற்றியே சேக்கிழார், "போதியாநிற்கும்" தில்லைப் பொது நடம்" என்று அருளினர். சிவஞானத்தைத் தரவே, அதன் பயனாகிய முத்தியின்பம் விளைதல் சொல்ல வேண்டா.

இத்திருக்கூத்தை அகத்திலும், புறத்திலும் தரிசித்தோர் அடையும் முத்திப் பேற்றின் இயல்பினையே உண்மை விளக்கம்,

"முத்தி தனை அடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்தகமாம் வீணை இவையிற்றின் — ஒத்த
இரதம்மணம் வெம்மை எழில்நாதம் போல
விரவுவர்என் றோதும் விதி"

என்று கூறுகின்றது. இதனைக் கேட்ட மாணுக்கர்க்கு 'இம் முத்தியின்பத்தினை அடைதற்குரிய வழி யாது? என்னும் வினா எழுதல் இயல்பே. அதனால், 'குரு லிங்க சங்கமங்களை

வழிபடுதலே இம்முத்திநிலையை அடைதற்குரிய வழி, என்று சொல்லி, இறுதியில்,

“ கற்று மனம்போற் கசிந்துகசிந் தேஉருகி
உற்றுசான் லிங்கம் உயர்வேடம் — பற்றுக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார் ”

என்று, குரு லிங்க சங்கமங்களின் வழிபாட்டினை வலியுறுத்த முடிகின்றது, உண்மை விளக்கம்.

‘உண்மை விளக்கம்’ என்னும் இந்நூல், சித்தாந்த உண்மைகள் அனைத்தையும் மிகச் சுருக்கமாகவும், தெளிவாக வும் கூறும் முழு நூலாய், சித்தாந்தத்தினை உணர விரும்புவோர், தொடக்கத்தில் கற்றற்கு ஏற்றவகையில் அமைந்துள்ளது. இதனை அனைவருங் கற்றுச் சித்தாந்த ஞானம் விளங்கப்பெற்று, இன்புறுவார்களாக.

மதிப்புரை

பாரதி சபதம்

மகாகவி பாரதியார் இந்தத் தலைமுறையில் வாழ்ந்த பேரறிஞர். அவருடைய கவிதைகள் தமிழ்க் கவிதை உலகில் ஒரு புதிய நெறியையும் திருப்பத்தையும் உண்டுபண்ணிவிட்டன என்று கூறுதல் பொருந்தும். அவருடைய பாஞ்சாலி சபதம் என்ற சிறு காப்பியத்திற்கு திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள் தந்துள்ள திறனாய்வுக் கட்டுரையே இந்நூல். பாரதியின் சபதமே பாஞ்சாலியின்சபதம் என்கிறார் நூலாசிரியர். நல்லநடை; தக்க மேற்கோள்கள்; இனிய விளக்கம். ஆங்கிலத் திறனாய்வாளர் கருத்துக்களை ஆங்காங்கு எடுத்துக் காட்டிப் பாரதியாரின் கவிவண்ணத்தை விளக்குகின்றார் ஆசிரியர். பாஞ்சாலி சபதத்தின் சந்தம், உவமை, கற்பனைகளை விளக்கி யுள்ளார். பாரதியாரின் பேத்தி திருமதி. விஜயபாரதியவர்கள் ஒரு முன்னுரை வழங்கியுள்ளார். பாரதியாரின் இலக்கிய ஆராய்ச்சி முறையில் குயில்பாட்டுப்பற்றி இவ்வாசிரியர் முன்னர் வெளியிட்டதைப் போலவே இந்நூலும் நன்றாக அமைந் துள்ளது. அன்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப்பெறலாம். திரு. மது. ச. விமலானந்தம், பைந்தமிழ்ப்பண்ணை, தஞ்சை 1. [விலை ரூ. 2—00. பக்கங்கள் 122.] — சொ. சிங்காரவேலன்.

ஆச்சாள்புரத்தில்

மகாகும்பாபிஷேக விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ் தானத் திருக்கோயிலில் ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மை சமேத ஸ்ரீ சிவலோகத்தியாகராஜ சுவாமிக்கும் ஸ்ரீ திருஞானசம்பந்தப் பெருமானுடன் ஏனைய விநாயகர் முதலிய பரிவாரங்களுக்கும் 29—4—64 புதன்கிழமை காலை மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப் பாக நிகழ்ந்தேறியது.

கும்பாபிஷேகத்திற்குச் சில தினங்களுக்கு முன்னிருந்தே ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் ஆச்சாள்புரத்திற்கு எழுந் தருளித் திருப்பணி வேலைகளை மேற்பார்வையிட்டுத் திருப்பணி வேலைகள் விரைவில் முடியுமாறு ஊக்குவித்தருளினார்கள், தருமையாதீனத்திலுள்ள உயர் அலுவலர்களும் அடிக்கடிசென்று மேற்பார்வையிட்டுத் திருப்பணிகள் செம்மையுற விரைவில் நிறைவெய்த ஏற்பாடுகள் செய்துவந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் அருளாணையால், இத் தலத்தில் விமானங்கள், இராஜகோபுரம், மண்டபங்கள் முதலிய வற்றைப் புதுப்பித்தும், திருச்சுற்று தளவரிசைகளிட்டும், திரு மதில்கள் பழுது பார்த்தும், சந்நிதிகளில் கதவுகள் அமைத்தும், பழுதடைந்த பல பகுதிகளையும் புதுப்பிக்கச் செய்தும், தல ஐதிகச் சுதைகளமைத்தும், எல்லா வகையான திருப்பணிகளும் செய்விக்கப்பெற்றன. ஸ்ரீ தோத்திரபூர்ணாம்பிகை அவதரித்த இடத்தில் ஒரு தனிக் கோயிலும் கட்டப்பெற்றது.

திருப்பணி செய்யப்பெற்ற திருக்கோயில், பல்வகை ஐதிகச் சுதைகளோடும் பலவித வண்ணங்களாலும் புதுமைபெற்றுப் பொலிகிறது. கும்பாபிஷேகத்தை ஒட்டிய நிகழ்ச்சிகள் 26—4—64 முதலே தொடங்கலாயின. அதனை ஒட்டிப் பன்னிரு திருமுறை மாநாடு, இசையரங்கு, இசைச் சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறலாயின. பெருங்கூட்டமாக அன்பர்கள் வந்திருந்து கண்டும் கேட்டும் உய்திபெற்றனர்.

திரைச்சீலைகளாலும் வண்ணக் காகிதங்களாலும் மின்னொளி தவழ அமைக்கப் பெற்றிருந்த மண்டபத்தில் 26—4—64 இரவு யாகசாலை பூஜை ஆரம்பமாயிற்று. கோயிலின் வெளித்திருச் சுற்றில் வடகிழக்கு மூலையில் அடுத்தடுத்து யாகசாலைகள்

அமைக்கப்பட்டிருந்தன. தருமையாதீனத்தைச் சேர்ந்த திருக் கோயில்களில் பணிபுரியும் சிவாச்சாரியார்கள் பலரும், பிறரும் யாகபூஜையில் பங்கேற்றனர், ஆறுகால பூஜை நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தினந்தோறும் யாகசாலை பூர்ணாகுதி தீபாராதனைக்கு எழுந்தருளி வழிபாடு நிகழ்த்தினர் கள். வேதவிற்பன்னர்களாலும் சிவாச்சாரியர்களாலும், சிவாகம பாடசாலை மாணவர்களாலும் வேதபாராயணம் சிவாகம பாரா யணங்கள் செய்யப்பெற்றன.

கடத்தில் பெருமான் யாகசாலைக்கு எழுந்தருளி மீண்டும் கும்பாபிஷேகம் ஆகும்வரை ஆதீன ஓதுவாமூர்த்திகளும் பிற பலரும் ஆதீனத் திருமுறை மாணவர்களும் தக்க பக்க வாத்தியங் களுடன் இடைவிடாது அகண்ட பாராயணமாகத் திருமுறை ஓதினர்.

யாகபூஜைக்குப் பின்னர் 29—4—64 புதன்கிழமை காலை குறித்த நேரத்தில் மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நிகழ்ந் தேறியது. அன்பர்கள் தரிசிக்க வசதியாக நுழைவுச் சீட்டுகள் வழங்கப்பெற்றன. பதினாயிரக்கணக்கான பக்தர்கள் குழுமி நின்று கும்பாபிஷேகத்தைக் கண்டு உய்திபெற்றனர். கும்பாபி ஷேக நிகழ்ச்சிகள் பொதுமக்களின் நலனைக் குறித்து ஒலிபெருக்கி மூலம் அவ்வப்போது அறிவிக்கப்பெற்றுவந்தது. கும்பாபி ஷேகத்துக்குப் பின்னர் மகாபிஷேகமும் ஆராதனைகளும் நிகழ்த்தப்பெற்றன. அதனை அடுத்து மந்திரபூர்வமாகவும் திருமுறை அர்ச்சனையாகவும் லட்சார்ச்சனைகள் நிகழ்த்தப் பெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் எழுந்தருளி தரிசித்து அன்பர்களுக்கு அருட்பிரசாதங்களும் வழங்கியருளி னார்கள். கும்பாபிஷேக விழா மலராக "திருவெண்ணீற்றுமைப் பிள்ளைத் தமிழ்" வெளியிடப்பெற்றது. திருக்கோயிலின் வர லாற்றை விளக்கவல்ல வண்ணத் துண்டுப் பிரசுரங்களும் (Folder) வழங்கப்பெற்றன.

இரவு பஞ்சமூர்த்திகள் வெள்ளிவாகனங்களிலும், திருஞான சம்பந்தப்பெருமான் முத்துச்சிவிகையிலும் எழுந்தருளச்செய்யப் பெற்றது. விசேஷ நாதஸ்வர இன்னிசைகளும், வாண வேடிக்கைகளும் நிகழ்ந்தன. திருவுலாக் காட்சியைக் கண்டு அன்பர்கள் அகங்களிகூர்ந்தனர்.

29—4—64 கும்பாபிஷேகத்தன்று இரவு அலங்கரிக்கப்பட்ட யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா திருமுறைப் பாராயணத் தோடு நிகழ்ந்தது. திருவீதியுலாவில் அற்புதத் திருப்பதிகங் களுக்கு விளக்கவுரை அறிஞர்களால் நிகழ்த்தப் பெற்றன.

இதில் வித்துவான் அருணைவடிவேல் முதலியார், மதுரை சிவ தர்மபாஸ்கர சிவஸ்ரீ. ம. க. சுந்தரேச பட்டரவர்கள் முதலிய அறிஞர்களால் திருஞானசம்பந்தர் அற்புத விளக்கங்கள் எடுத்து மொழியப்பட்டன.

பன்னிரு திருமுறை மாநாடு

29—4—64 அன்று நிகழ்ந்த மகாகும்பாபிஷேகத்தை ஒட்டி ஆச்சாள்புரம் திருக்கோயிலின் வெளிச்சுற்றில் வடபுறமாக அமைக்கப் பெற்றிருந்த மாநாட்டுப் பந்தல் தோரணங்களாலும் மின்விளக்குகளாலும் அமைக்கப்பெற்றிருந்தது. 26—4—64மாலை முதல் பன்னிரு திருமுறை மாநாடு தொடங்கி நிகழலாயிற்று.

26—4—64 ஞாயிற்றுக்கிழமை இரவு வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அமைச்சர் அவர்களை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினர்கள். பின்னர், திருமுறை மாநாட்டை சென்னைமாநில செய்தித்துறை அமைச்சர் திரு. ஜி. பூவராகன் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். தொடக்க வுரையில் அவர் "திருக்கோயிலின் அவசியம் பற்றியும். திருக்கோயிலால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், அக்கால மக்களின் இறையன்பு. இக்கால மக்களின் ஆன்மீக வளர்ச்சி நோன்பின் இன்றியமையாமை பற்றியும் விளக்கித் திருக்கோயில்களின் வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டுள்ள தருமையாதீனத்தைப் பாராட்டினர்.

அன்றிரவு 'ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி' என்ற பொருள்பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியாராய்ச்சித் துறை திரு. சொ சிங்காரவேலன் M. A. அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

27—4—64 திங்கட்கிழமை காலை நிகழ்ச்சியில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர் வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் 'நற்றமிழ்க்கு இன்துணை' என்ற பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். தருமையாதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர் திரு. ஆர். வேலாயுத ஓதுவார் குழுவினரால் 'திருஞானசம்பந்தர் திரு அவதாரம்' இசைச் சொற்பொழிவாக நிகழ்த்தப்பெற்றது.

அன்றைய மாலை நிகழ்ச்சியில் சென்னை இந்து சமய அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் தலைமையுரையாற்றினர். அண்ணாமலைப்பல்கலைக்கழகத்

துணைப்பேராசிரியர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார் 'அரத்துறை அடிகள் அருள்' என்ற பொருள் பற்றியும், வித்துவான் திரு. வீ. உலகஊழியர் அவர்கள் 'விலையுடை அருந்தமிழ்' என்ற பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

இரவு நிகழ்ந்த திருமுறை இசையரங்கு தருமையாதீனத்தைச் சேர்ந்த திருமுறை இசைவாணர்கள் சங்கீத பூஷணம் திரு. பி. சுவாமிநாதன், திருமுறை இசைமணி திரு. சா. சம்பந்தம் குழுவினரால் துணைக்கருவிகளோடு மிகச் சிறப்பாக நிகழ்த்தப் பெற்றது.

24—4—64 செவ்வாய்க்கிழமை காலை நிகழ்ச்சியில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் திருநெறிச் செம்மல் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் 'திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ்' என்ற பொருள்பற்றி விரிவுரையாற்றியபின், தமிழ்ப் பேராசிரியர், சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன் அவர்கள் 'ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை' என்ற பொருள்பற்றிப் பேசினர்.

அன்றிரவு நிகழ்ச்சியில் சிதம்பரம் இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. பு. ர. சுவாமிநாதன் B. A., L. T., அவர்கள் 'ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை' என்ற பொருளில் பேசியபின்னர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தத்துவப் பேராசிரியர் திரு. சி. இராமலிங்கம் M. A., அவர்கள் 'ஞானத்தின் திருவுரு' என்ற பொருளில் விரிவுரையாற்றினர்.

இரவு அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரி முதல்வர், தருமையாதீன இசைப்புலவர், இசையரசு, திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள் குழுவினரின் இசையரங்கு நிகழ்ந்தது.

29—4—64 புதன்கிழமை மாலை தருமையாதீனப்புலவர், நாகப்பட்டினம் தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. வை. மு. சண்முகதேசிகர் அவர்கள் குழுவினரால் 'திருஞான சம்பந்தர் திருமணம்' என்ற பொருளில் இசைச்சொற்பெழிவு நிகழ்த்தப்பெற்றது.

நான்குநாள் நிகழ்ச்சிகளுக்கும் ஆண்களும் பெண்களுமாக அன்பர்கள் பலர் திரளாகக் குழுமி நற்பொருள்கேட்டுச் சிந்தித்து இறையருளுக்குப் பாத்திரமாயினர்.

செய்திகள்

தருமையாதீனத்தில்
அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா.

6—5—64 புதன்கிழமை சதயத்திருநாள். அன்று ஸ்ரீ ஞான புரீசுவரசுவாமி திருக்கோயிலில் அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா மிக்க சிறப்புடன் நடைபெற்றது. அன்று ஸ்ரீ ஞானபுரீ சுவரருக்கு ருத்ராபிஷேகமும், அப்பர் சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நிகழ்த்தப் பெற்றன. இரவு அப்பர் சுவாமிகளைச் சிவிகையில் எழுந்தருளச் செய்து திருவீதியுலா திருமுறைப்பாராயணத்துடன் நடைபெற்றது. அப்பர் சுவாமிகள் அற்புதத் திருப்பதிகங்களுக்கு அவ்வப்போது விளக்கவுரையும் கல்லூரிப் பேராசிரியர்களால் நிகழ்த்தப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் காலை, மாலை இருவேளை களிலும் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்.

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைத் திருக்கோயிலில்
மூன்றேகால்கோடி அர்ச்சனைப் பூர்த்தி விழா

6—5—64 புதன்கிழமை ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைத் திருக்கோயிலில் ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு உலக க்ஷேமார்த்தம் நடைபெறுகின்ற கோடி அருச்சனையில் மூன்றே கால் கோடி அர்ச்சனைப் பூர்த்திவிழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. அன்று ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனை களும் நவசக்தி அர்ச்சனையும் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வைக்கப்பெற்ற துணிப்பைகளை வழங்கியருளினர்கள்.

தருமையாதீன தேவஸ்தானங்களில்
சித்திரைத்திங்கட் பெருவிழா

திருவையாற்றில்:

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கட்

பெருவிழா 16—4—64 வியாழக்கிழமை முதல் தொடங்கி 25—4—64 சனிக்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. 20—4—64 அன்று பெருமான் தன்னைத்தான் பூஜித்தல், மாகேஸ்வரபூஜை செய்தல் முதலியன சிறப்பு நிகழ்ச்சிகள். 27—4—64 திங்கட்கிழமையன்று சப்தஸ்தானம். நந்திகேசுவரர் சுயசாம்பிகையுடன் மணக்கோலத்துடன் வெட்டிவேர்ச் சிவிகையிலும், ஸ்ரீ ஐயாறப்பர் அறம்வளர்த்த நாயகியாரோடு விசித்திரக் கண்ணாடிச் சிவிகையிலும் ஏழூர் வலம்வருதலும். 28—4—64 அன்று ஏழூர் சுவாமிகளும் ஐயாற்றுக் கோயிலுக்கு எழுந்தருளுதலும் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தன. விழா நாட்களில் சிறந்த நாதஸ்வர இன்னிசை முதலியன நடைபெற்றன. விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசைச் சொற்பொழிவுகளும் மாலை 6 மணி முதல் தொடங்கி நடைபெற்றன.

சீகாழியில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், ஸ்ரீ திருநிலை நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமிக்கு 16-4—64 வியாழக்கிழமை தொடங்கி 25—4—64 சனிக்கிழமை முடிய பிரமோற்சவம் மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது. இரண்டாம் திருநாளான 26—4—64 ஞாயிற்றுக்கிழமை ஞானசம்பந்தப் பெருமானுக்கு அருளாரமுதம் கொடுத்த சிறப்பு நிகழ்ச்சியாகிய 'திருமுலைப்பால்' நிகழ்ச்சி நண்பகல் பன்னிரண்டுமணியளவில் நிகழலாயிற்று. ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் எழுந்தருளியிருந்து தரிசித்து அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள். பெருந்திரளான மக்கள் கண்டுகளித்தனர்.

உற்சவத்தையொட்டித் திருமுறை மாநாடு, இசையரங்கு, கதாகாலக்ஷேபம் முதலியன நிகழலாயின. அன்பர்கள் பலர் வந்திருந்து தரிசித்தும் கேட்டும் பொன்னும் மெய்ப்பொருளும் போகமும் திருவும் பெற்றனர். 16—4—64 முதல் 22—4—64 முடிய உள்ள நாட்களில் மாலை ஐந்து மணிமுதல் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் சேக்கிழார் அருளிய 'திருஞானசம்பந்தர்' புராணப் பிரசங்கம் நிகழ்த்தப்பெற்றது.

நாள்தோறும் நடைபெற்றுவந்த திருமுறை மாநாட்டில் கலந்துகொண்டு அறிஞர் பலர் சொற்பொழிவாற்றினர். பன்னிரு திருமுறைகளும் மாநாட்டுப் பொருளாகக் கொள்ளப்பெற்று

விளக்கப்பட்டன. சிறப்பு நாட்களில் இரவு பத்துமணியளவில் திரு. எம். எம். தண்டபாணி தேசிகர், மதுரை திரு. சோமசுந்தரம் ஆகியோரது இன்னிசை விருந்தும் நிகழலாயிற்று.

22—4—64 புதன்கிழமையன்று திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் நிகழலாயிற்று. வித்துவான். திரு. வீ. உலகஊழியர் அவர்கள், திரு. வை. சுந்தரேச*வாண்டையார் அவர்கள் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தேவாரவகுப்பு மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா செய்விக்கப்பெற்றது.

திருக்கடவூரில்:

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கட் பெருவிழா 16—4—64 வியாழக்கிழமை முதல் தொடங்கி 25—4—64 சனிக்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்கசிறப்புடன் நடைபெறுகிறது. 21—4—64 செவ்வாய்க்கிழமை காலசம்காரத் திருநாள் அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வைக்கப்பெற்ற துணிப்பைகள் வழங்கப்பட்டன.

வெள்ளிக் கதவுத் திறப்பு விழா

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி சந்நிதித் திருவாயில் கதவுகள் வெள்ளியினால் அழகிய வேலைப்பாட்டுடன் செய்யப்பெற்றிருந்தன. அவற்றைத் திரு. சோமசுந்தர தேசிகர் அவர்கள் 18—4—64 சனிக்கிழமை மாலை திறந்துவைத்தார்கள், அன்றே சென்னை மாநில சட்டசபைச் சபாநாயகர் திருமுன்னர் ஸ்ரீ காலசம்கார மூர்த்திக்குப் புதிதாகச் செய்யப்பெற்ற வெள்ளி மஞ்சத்தில் ஸ்ரீ காலசம்கார மூர்த்தியை எழுந்தருளச் செய்யப்பட்டது, அன்பர்கள் பலர் கண்டு தரிசித்து மகிழ்ந்தனர்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் 1—5—64

வெள்ளிக்கிழமை அன்று காலை ஸ்ரீ முத்துச்சட்டைநாதருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மாலையில் ஸ்ரீ முத்துச்சட்டை நாதர் புறப்பாடும் நடைபெற்றது. பின்னர் மலைக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சட்டைநாதப் பெருமானுக்கு புழுகு காப்பு முதலியன நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். இவ்வழிபாடு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் 9 ஆண்டுகளாக நடைபெறுகிறது. வழிபாட்டிற் குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சட்டைநாதர் பிரசாதம் வைக்கப்பெற்ற துணிப் பைகளை வழங்கியருளினர்கள். சிறப்பு வழிபாடு குறித்து சமயச் சொற் பொழிவும் நடைபெற்றது. தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர், சித்தாந்தக் கலைமணி வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியாரவர்கள் "சட்டைநாதர் பெருமை" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி மாணவர்களுக்குப் பரிசு

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியைச் சேர்ந்த நிறைநிலை மாணவர்கள் இருவர் இருவேறு பரிசுகள் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு (1963) ஜூன் திங்களில் நிகழ்த்தப்பெற்ற மதுரை தியாகராயர் கல்லூரி தமிழ் இலக்கியப் பரிசுப் போட்டி யில் 'இராமலிங்க அடிகளாரின் திருப்பாடல்கள்' என்ற பொருள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையை இமயஜோதி என்ற புனை பெயரில் எழுதி மூன்றும் பரிசு பெற்றுள்ளார் திரு. க. செல்லப்பா கவுண்டர். அதே ஆண்டில் சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தாரால் நிகழ்த்தப்பெற்ற 'மறைமலை யடிகள் நினைவுக் கட்டுரைப் போட்டியில் கலந்துகொண்டு டி கல்லூரி நிறைநிலை மாணவர் இரா. செல்வக்கணபதி அடிகளா ரின் சமயத்தொண்டு பற்றி கட்டுரை வரைந்து மூன்றும் பரிசு பெற்றுள்ளர். இவ்விரு கட்டுரைப் போட்டிகளிலும் தமிழக தமிழ்க்கல்லூரி கலைக் கல்லூரிகள் கலந்துகொண்டன. தமிழ்க் கல்லூரியைப் பொறுத்தவரை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியே இரு பரிசுகள் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

(குரோதிஸு வைகாசிமீ 1உ முதல் 31உ முடிய)

(14—5—64 முதல் 13—6—64 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ர பலனைத் தரும் நூதனமாகத் தொழில் மாறுதல். சஞ்சார பலன் அதிகரித்தல், சுப விரயங்கள் அதிகமாகுதல், பந்துமித்திராளின் இனவருத்தம் காட்டல் இவைகள் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½.

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் தொந்திரவைக் கொடுக்கும். வரவுக்கு மிஞ்சின செலவு ஏற்படும். சரீர பீடையும் காட்டும். ரோஹிணி 4 பாதங்களும், மிருகசீரிஷம் 1, 2 பாதங்களும் அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். மங்களகாரியங்கள் ஏற்படச் செய்யும். இராஜாங்க மூலமாய்ப் பரிசுகள் கிடைக்கச்செய்யும். வியவகாரம் சாதகமாய் ராசியாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மகத்தான வைபவங்களையும், தனலாபத்தையும் தரும். எங்கும் கீர்த்தி ஓங்கச் செய்யும். வெகு தூரத்திலிருந்து அழைப்புக் கடிதங்கள் வந்துகொண்டிருக்கும். குடும்பத்தில் மங்கள காரியமும், புத்திராதிகளால் மேன்மையும் உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சகலகாரியங்களும் தெய்வபலத்தால் சாதிக்கமுடியும். எந்தக் காரியங்களும் கவலையோடு பூர்த்தி

அடையச்செய்யும். நஷ்டதனங்கள் வந்துசேரும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்களின் கிரயவிக்கிரயங்கள் ஏற்படும். அதிக விரயம் காட்டும். சுபாதிகள் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். தொழில் ஓங்கும். குடும்பம் தழைக்கும். விவாகாதிகள் ஏற்படும். வம்ச விருத்தியாகும். அடிக்கடி சஞ்சாரமும், வரவுக்கு மிஞ்சின செலவும் ஏற்படச்செய்யும். சதா மனம் குழப்பமடையும். பெரியோர் அன்பு கிடைக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் தெய்வ பலத்தால் ஓங்கச் செய்யும். உஷ்ணாதிக்கியமான ரோகபீடைகளைத்தரும். உடனுக்குடன் சமனமாகும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். எங்கும் நிறைந்த கீர்த்தி ஏற்படச்செய்யும். இராஜாங்கமூலம் ஒருவராலும் சாதிக்கமுடியாத காரியங்கள் தானாகவே சாத்தியமாகும். தூரதேசத்திலிருந்து சில அப்பிரியவார்த்தைகள் காதில் விழும். அநேக அற்புதத் தோற்றங்கள் ஏற்படச் செய்யும். ஆரோக்கியம் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

துலாராசி முடிய நல்ல சுபத்தையே தரும். அநேகம் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் தானாகக் கிடைக்கச்செய்யும். தெய்வபலம் பிரகாசிக்கும். தொழில் ஓங்கும். ஆரோக்கியம் உண்டுபண்ணும் வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விசாகம் 4 ஆம் பாதமும் அனுஷமும் சிரம பலனைத் தரும். வரவுக்கு மிஞ்சின செலவுகள் ஏற்படும். குடும்பத் தொல்லைகளாலும், ரோகாதிகளாலும் கவலை உண்டுபண்டும். கேட்டை 4 பாதங்களும் ஜயத்தைத்தரும். இடம் மாறல் ஏற்படும். நல்ல சுகத்தை உண்டுபண்ணும். உறவினர்களால் சில கவலைகளைக் கொடுக்கும். ஆனாலும் சுபமே ஓங்கச் செய்யும். சனி, ஞாயிறு சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் மகத்தான சுகபோகங்களைத்தரும். நூதன வாகன யோகமும், நூதன கிரக பூமி லாபங்களும்

உண்டாகும். நஷ்டமான பொருள் வந்துசேரும். மேலோர் பெரியோர்களுடைய அன்பு கிடைக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் இராஜாங்க மூலமாய் மேல் பதவிகளைத்தரும். உலக பிரசித்தி ஏற்படச்செய்யும். குடும்பம் ஓங்கும். கிரகலாபமும், தனலாபமும் ஏற்படும். வியாதி நீங்கி ஆரோக்கியம் தரும். உறவினர்களால் பல சௌகரியங்களை உண்டுபண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி - $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் சுபமேயாகும். நூதன வஸ்திராபரணச் சேர்க்கைகளைத் தரும். வித்தியாவிருத்தியாகும். பரிசுகள் கிடைக்கச்செய்யும். ஜீவன லாபம் உண்டுபண்டும். விவாகாதி சுபங்களைத்தரும். எல்லாக்காரியங்களும் சுலப சாத்தியமாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் ஒருவராலும் அடையமுடியாத பெரிய ஸ்தானங்களைத்தந்து, உலகப் பிரசித்தியைத்தரும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். தொழில் ஓங்கும். குடும்பம் தழைக்கும். ஆரோக்கியம் உண்டாகும். சுபங்கள் நடக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

குறிப்பு :— மேற்படி மாதம் தாபம் ஜாஸ்தியாகும். மழை பெய்யவேண்டிய இடங்களில் மழை பெய்யாது. அநேக அற்புதங்கள் அதாவது இயற்கைக்கோளாறுகள் அதிகமாகும். பஞ்சபூதங்களின் சேஷ்டைகள் ஜனங்களுக்குப் பயத்தைத்தரும். தனதான்யக்குறைவால் அதிக சிரமம் காட்டும். விந்தியோத்திர தேசங்களில் அநேக மாறுதல்களும், சத்துருக்களுடைய உபத்திரவங்களும் அதிகமாகும். மகாஜனங்களுடைய தபோபலத்தால்தான் உலகம் சுபிக்ஷமடையவேணும். எல்லோரும் வேற்றுமைகளை விட்டு தெய்வபலத்தையே நாடி உலக க்ஷேமங்களுக்குப் பாடுபட கடவுள் கருணாமூர்த்தியாதலால் உடனே சுபிக்ஷமும் க்ஷேமமும் உண்டுபண்ணுவார். சுபமுண்டாகும்.

உ

சிவமயம்

ஆறுந்திருமுறை

(குறிப்புரையுடன்)

திருத்தருமையாதீனத் திருமுறை வெளியீட்டு வரிசையில் திருநாவுக்கரசர் தேவாரத்தில் திருத்தாண்டகத் தொகுப்பாகிய ஆறுந்திருமுறை சிறந்த குறிப்புரை ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் 1026 பக்க அளவில் வெளிவந்துள்ளது. குறிப்புரையில் திருத் தாண்டகங்களின் அரிய பகுதிகளுக்கு விளக்கங்களும், ஆராய்ச் சிக்கட்டுரைகளில் அப்பர் தேவாரம் முழுவதிற்குமான குறிப்புக் களும் அமைந்துள்ளன. குறிப்பிடத்தக்க சில படங்களும் ஆங்காங்கு உள்ளன. நல்ல தாளில் அழகிய முறையில் அச்சிடப் பட்டுக் கண்ணைக்கவரும் காலிகோபைண்டு செய்யப்பட்டுள்ளது டிம்மி 1X8 சைஸ். விலை ரூ. 8—00. தபால் செலவு ரூ. 2—75.

கிடைக்குமிடங்கள் :-

1. காஷியர்,
   தருமையாதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.

2. டிரஷரர், ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம்,
   வைத்தீஸ்வரன்கோயில், தஞ்சாவூர் ஜில்லா.

3. காஷியர், ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம்,
   சீர்காழி, தஞ்சாவூர் ஜில்லா.

4. காஷியர், ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம்,
   திருபுவனம், திருவிடைமருதூர் வழி, தஞ்சாவூர் ஜில்லா.

5. காஷியர், ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம்,
   திருப்பனந்தாள், கும்பகோணம் வழி, தஞ்சாவூர் ஜில்லா.

6. காஷியர், ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானம்,
   திருக்குவளை, நாகப்பட்டினம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா.

குறிப்பு :- தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும் தபால் செலவு தனி.

உ

குருபாதம்

சாத்திரதோத்திரப் பாட வகுப்பு

திருத்தருமையாதீனத்தின் ஆதிபரமாசாரிய மூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவை ஒட்டி. 23—5—64 சனிக்கிழமை முதல் 1—6—64 திங்கட்கிழமை முடியப் பத்து நாட்கள், சாத்திரதோத்திரப் பாட வகுப்பு, ஆதீனம் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜை மடத்தில், நாள்தோறும் காலை 10-30 மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான்,

திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்களால்

(சித்தாந்தப் பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி)

வகுப்பு நடத்தப்பெறும்.

அன்பர்கள் வந்து கேட்டுப் பயன் பெறுக.

<u>மதிப்புரை</u>

"சக்தி நான்மணி மாலை"

இயற்றியவர் :- வித்துவான், திரு. ச. இராமசாமி (குயில்); வெளியிடுபவர் :- தமிழ்ச்செல்வி நிலயம், மீனாட்சிபுரம் (அஞ்சல்) விளாத்திகுளம் (வழி) நெல்லை மாவட்டம். விலை. 50 காசு.

அன்னை பராசக்தியின் மீது இதன் ஆசிரியர் பாடியுள்ள இந் நாற்பது பாடல்களும் எளிமைப் பண்புடன் உள்ளன. பழைய போக்கில் புதிய கருத்துக்களை ஆக்கித் தந்துள்ளார் ஆசிரியர். சக்தியின் பால் இவர்க்குள்ள பக்தி பாடல் தோறும் பரிமளிக்கிறது என்றாலும் 15, 16, 19, 23, 25; ஆகிய பாடல்கள் உருக்கமுடன் உள்ளன. எல்லோரும் வாங்கி இன்புறக் கூடிய நூல். இதனை எழுதிய நல்லாசிரியர்க்கு நம் வாழ்த்துக்கள்.

— "வேலன்"

Printed & Published by K. Sundaresa Iyer. Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-5-64.